# டட்லிக்கு எதிராக தேர்தல் ஆட்சேபமனு தாக்கல்

Registered as a News Paqer in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49

போன் : 389

மலர் 12

இதழ் 131

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 8 ரபி. ஆகிர் 17 திங்கட்கிழமை [22-6-70]




பொ. அம்பலவாணர்

தங்க வைர

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட்,

யாழ்ப்பாணம்.

கல்வனைஸ்ட்

தண்ணீர் தாங்கிகள்

(GI Water Tank)

400 கலன்களிலும்

மற்றும் தேவையான அளவுகளிலும்

கிடைக்குமிடம்:-

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/ 1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7130

## வடக்கு, கிழக்கில் 8 ஆட்சேபமனுக்கள்

கொழும்பு, திங்கள்

முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா டெடிகம தொகுதியில் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து சுப்ரீம் கோட்டில் தேர்தல் ஆட்சேபமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த தேர்தல் சம்பந்தமாக இதுவரை 13 ஆட்சேப மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன டெடிகம, நீர்கொழும்பு, நுவரெலியா, கண்டி. வெலிமடை யாழ்ப்பாணம், மன்னார் வட்டுக்கோட்டைபருத்தித்துறை, நிந்தவூர், பட்டிருப்பு, வவனியா, நல்லூர் ஆகிய தொகுதிகளுக்கான தேர்தல் ஆட்சேபமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியா ஆட்சேப மனு மீதான விசாரணை இன்று நடைபெறவிருக்கிறது.

# சகல இன மக்களும் வேறுபாடின்றி சரிசமனுக வாழ வழி வகுப்போம்

## உல்லாசப் பயண விடுதிகள் உருவாகும்

கோட்டை, ஞாயிறு

விவசாயிகள், தொழிலாளர்கள் போன்றவர்களும் வருடத்தில் ஒரு முறை அவசியமாகும் போது தங்கி ஓய்வுபெறுவதற்கு வசதியாக மலைநாட்டில் உல்லாசப்பயண ஹோட்டல்களையும் தங்கு விடுதிகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை உல்லாசப் பிரயாண சபையின் தலைவர் திரு. தர்மசிறி சேனநாயக்கா எடுத்துவருகிறார்

இத்திட்டத்தின்படி மலைநாட்டில் சுகப்பிரதேசங்களிலுள்ள உல்லாசப்பயண ஹோட்டல்கள், உல்லாசப் பயண சபையின் பங்களாக்கள் ஆகியவற்றில் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களில் தங்கி ஓய்வெடுப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பேணிக்கொள்ள வசதியேற்படும் என்று கருதப்படுகின்றது

## ஒரு திருத்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

7-4-70ம் திகதி ஈழநாட்டில் ''நீசண்டியன்'' என்ற தலைப்பில் 4-ம் பக்கத்தில் வெளியான செய்தியில் திரு. சிவப்பிரகாசம் என்பவரின் வீட்டில் பொலிஸாரால் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

திரு. சிவப்பிரகாசம்தனது வீட்டில் பிரஸ்தாப துப்பாக்கி இருப்பதாகப் பொலிஸாருக்குத்தகவல் தெரிவித்

## மக்கள் வெற்றி முத்திரை

கோட்டை, ஞாயிறு

பண்டாரநாயக்க ஞாபகார்த்த தினமான செப்டம்பர் 26-ம் திகதி மக்கள் வெற்றி தினத்துக்குரிய முத்திரை வெளியிடப்படும். பிரதமரின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இந்த முத்திரையின் வடிவமைப்பு சாதாரண மனிதனின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாய் இருக்கும் முத்திரையில் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் உரு

## வகுப்புவாதத்தை கைவிடுங்கள்

### குடியரசு நாடு பிரகடனம் பற்றி ஆட்சிமன்றத்தில் இலங்கரத்தின

கொழும்பு, ஞாயிறு

**இந் நாட்டைச் சேர்ந்த சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழக் கூடியதாக இலங்கை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தப்படும், சமய, மொழி, இன வேறுபாடின்றி சிறுபான்மை மக்களும் ஏனைய இனத்தவருடன் சரிசமனுக வாழக் கூடியதான அரசியல் அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்துவோம்:'**

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. [illegible]பி. இலங்கரத்தின இன்று ஆட்சிமன்றத்தில் இவ்வாறு கூறினர். மக்கள் அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிமன்றக் [illegible] இன்று நடைபெற்[illegible] [illegible]மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் [illegible]கம் சமர்ப்பித்தார். இதற்குப் பதிலளித்து தி[illegible]ரி. பி. இலங்கரத்தின [illegible]பசினர்.

திரு இலங்கரத்தின தமது பதிலின்போது கூறிய [illegible] ஆட்சியை [illegible]ம் ஒருபோதும் கொடுக்[illegible]ட்டோம் என்பதைக் [illegible] கையை விட்டுவிட வேண்டும்.

தமிழரசுக்கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி. இதை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் வடக்குகிழக்கில் தமிழரசுக் கட்சியை ஆதரிப்பவர்களுக்கும் முற்போக்கு கொள்கையுடைய ஏனையோருக்கும்

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 304-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

33 X 0042 ரூபா 90,880

2-வது பரிசு

16 S 0757 ரூபா 36,352

3-வது பரிசு

37 G 0822 ரூபா 9,088

தலா ரூ 454-40 சதம் ஆறுதல்பரிசுபெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 03 M 0026 | 05 X 0840 |
| 25 B 0177 | 23 X 0015 |
| 38 H 0432 | 11 E 0403 |
| 26 X 0705 | 30 W 0124 |
| 16 Q 0157 | 09 A 0100 |
| 16 O 0636 | 13 S 0026 |
| 01 D 0125 | 04 J 0358 |
| 10 O 0022 | 26 K 0786 |
| 11 Q 0798 | 07 Q 0633 |
| 03 O 0170 | 19 Y 0611 |
| 35 H 0603 | 24 D 0745 |
| 07 L 0251 | 23 X 0944 |
| 35 T 0673 | 30 D 0983 |
| 03 G 0951 | 09 L 0781 |
| 09 X 0325 | 25 F 0358 |
| 06 C 0398 | 23 C 0620 |
| 13 P 0107 | 23 W 0166 |
| 25 N 0620 | 08 Z 0917 |
| 33 D 0700 | 21 Y 0913 |
| 30 x 0884 | 23 K 0085 |
| 34 N 0137 | 11 x 0471 |
| 18 K 0643 | 08 M 0423 |
| 30 M 0847 | 32 N 7059 |
| 10 R 0969 | 05 D 0945 |
| 23 K 0398 | 33 Q 0375 |
| 26 S 0033 | 24 V 0201 |
| 22 Y 0380 | 31 Q 0775 |
| 19 S 0122 | 34 N 0055 |
| 14 X 0557 | 31 K 0175 |

## 25-ம் திகதி அமைச்சர் வருகிறார்

கொழும்பு, ஞாயிறு

தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் இம்மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார், அவருக்கு மகத்தான வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இம்மாதம் 26-ம் திகதி அமைச்சர் குமாரசூரியர் இங்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 25-ம் திகதியே அவர் வரவிருப்பதாகவும் 26-ம் திகதி கொழும்பு திரும்பிவிடுவாரென்றும் நமது நிருபரிடம் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

விசேட விமானமூலம் மாலை 3 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையவிருக்கும் திரு குமாரசூரியருடன் வீடமைப்பு அமைச்சர் பீட்டர் கெனமனும் வருகிறார். நியமன எம்,பி, அசீஸும் மற்றும் சில பாராளுமன்றக் காரியதரிசிகளும் இங்குவருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது:

அமைச்சர்களை வரவேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் சுகப்பிரதேசங்களி லுள்ள உல்லாசப்பயண ஹோட்டல்கள், உல்லாசப் பயண சபையின் பங்களாக் கள் ஆகியவற்றில் விவசாயி களுக்கும் தொழிலாளர்க ளுக்கும் வசதிகள் செய்து கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று தெரி கின்றது

உழைப்பினால் களைப் படையும் விவசாயிகளும் தொழிலாளர்களும் இந்த உல்லாசப் பயண இல்லங்க

பட்டது என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

திரு. சிவப்பிரகாசம்தனது வீட்டில் பிரஸ்தாப துப்பாக்கி இருப்பதாகப் பொலி ஸாருக்குத்தகவல் தெரிவித் ததைத் தொடர்ந்து பொலி ஸார் அவரிடமிருந்து துப்பாக்கியைப் பாரம் எடுத் தனர். இச் செய்தியில் ஏற் பட்ட சிறுதவறினால் அவரு க்கு ஏற்பட்ட கஷ்டங்களுக் காக வருந்துகின்றோம்.

— ஆர்

# 'நெல்லியடி பட்டினசபைத் தேர்தலைப்பின்போடுக'

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொதுமக்களின் விருப்பத் திற்கு விரோதமாக எல்லை நிர்ணயிக்கப்பட்ட நெல்லி யடி பட்டன சபையின் தேர் தலை ஒத்திவைத்து சிறுபான்மையினர் பிரதிநிதி த்துவம் வகிக்க கூடிய முறை யில் புனரமைப்பு செய்யு மாறு அரசாங்கத்தை கேட் டுக் கொள்ளும் தீர்மானம் அகில இலங்கை சிறுபான் மை தமிழர் மகாசபை கமிட்டி கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டது.

திரு. எம். சி சுப்பிரமணி யம் தலைமையில் கூடிய இக் கூட்டத்தில் சிறுபான்மைத் தமிழர்களின் கல்வி கலாச் சார விஷயங்கள் சம்பந்த மாக கல்வி அமைச்சரை நியமன எம், பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமை யில் பேட்டி காணுவதென் றும் தீர்மானிக்கப்பட்டது.

மகாசபை மூலம் நிதி திரட்டி நியமன எம். பிக்கு கார் அன்பளிப்பு வளங்கு வதென்றும் உள்ளூராட்சி மன்றங்களில் சிறுபான்மை தமிழர் பிரதிநிதித்துவம் பெறும் முறையில் எல்லை நிர்ணயிக்க கோருவதென் றும் தீர்மானிக்கப்பட்டது.

— —

## இலங்கை வங்கி

கோட்டை, ஞாயிறு

திரு. என். சத்தியேந்திரா இலங்கை வங்கியின் அதிபர் கள் சபையில் ஒரு அங்கத் தவராக நியமனம் பெற்றுள் ளார்.

இலங்கை வங்கியின் அதி பராக திரு எம் எஸ் டி எஸ் ஜெயரத்ன நியமிக்கப்பட் டுள்ளார் இவ்வதிபர்கள் சபையில் திரு யு கே எட் மண்ட், திரு டி டபிள்யு வணிகசேகரா ஆகியோரும் அங்கத்துவம் வகிக்கிறார் கள்.

சாதாரண மனிதனின் அபிலாஷைகளைப் பிரதி பலிப்பதாய் இருக்கும் முத்திரையில் காலஞ் சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண் டாரநாயகாவின் உரு வமும் பொறிக்கப்பட்டி ருக்கும். இப்பொழுது புளகத்திலுள்ள திரு. டி. எஸ் சேனநாயகா வின் உருவம் கொண்ட 10 சத முத்திரைக்குப் பதிலாக இப்புதிய முத் திரை புழக்கத்திற்கு வரும் செப்டம்பர் 26-ந் திகதி பொதுவிடு முறை தினமாகவும் அறிவிக்கப்படலாம் என்று கருதப்படுகின் றது.

இன்று ஆட்சிமன்றத்தில் இவ்வாறு கூறினார். மக்கள் அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிமன்றக் கூட்டம் இன்று நடைபெற்றது.

மகாசனப்பிரசங்கத் துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவா தத்தில் தமிழரசுக்கட்சி கொண்டு வந்த திருத்தப் பிரேரணைகளை காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் சமர்ப்பித்துப் பேசினார்.

சமஷ்டி அரசியல் அமைப்பு வேண்டும் வடக்கு, கிழக்கு நீதிமன்ற மொழி தமிழாக இருத்தல் வேண்டும். போதனா மொழி தாய்மொழி யாக இருத்தல் வேண்டும். ஆகிய 3 திருத்திப் பிரே ரணையும் திரு செல்வநாய னார்.

திரு இலங்கரத்தின தமது பதிலின்போது கூறிய தாவது:

சமஷ்டி ஆட்சியை நாம் ஒருபோதும் கொடுக்கமாட் டோம் என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுகிறோம்.

சமஷ்டி என்ற பிரிவினைக் கோரிக்கையை வைத்துக் கொண்டு சமஷ்டிக் கட்சி யினர் உயிர்வாழ்ந்து வரு கின்றனர் தமிழரசுக் கட்சி யினர் ஆட்சிமன்றத்தில் பேசுவது இதுதான் கடை சித் தடவையாக இருக்கும். சோஷலிச ஜனநாய அடிப் படையில் சகல இன மக்க ளும் இன மொழி, மதவேறு பாடின்றி வாழ்வதற்கான ஆட்சியை நாம் நடத்து வோம், தமிழரசுககட்சி இனிமேல் சமஷ்டிக் கொள்

வகுப்புவாதக் கட்சி. இதை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் வடக்குகிழக்கில் தமிழரசுக் கட்சியை ஆதரிப் பவர்களுக்கும் முற்போக்குக கொள்கையுடைய ஏனையோ ருக்கும் ஒன்று சொல்லி வைக்க விரும்புகிறோம் வகுப்புவாதக் கட்சியான தமிழரசுக் கட்சியை ஆத ரிக்க வேண்டாம். முற்போக் குக் கொள்கையையுடைய ஐக்கிய முன்னணியையோ அல்லது ஐக்கியதேசியக்கட் சியையோ நீங்கள் ஆதரிக் கலாம். வகுப்புவாதம் பேசி யவர்கள் அரசியல் அரங்கி லிருந்தே இல்லாமல் போகி றதை நாம் காணக்கூடிய தாகவிருக்கிறது அதேபோல தமிழரசுக் கட்சிக்குமிந்த நிலை வரும் அறிகுறி தென் படுகிறது,

தமிழரசுக்கட்சி விரும்பி னால்என்ன விரும்பாவிட் டால் என்ன இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிர கடனப்படுத்துவோம், சகல இன மக்களும் சம உரிமை யுடன் வாழ நாம் அதில்வழி வகுப்போம் வடபகுதியில் சிறுபான்மைத் தமிழரும் சரிசமனாக வாழத்தான் போகிறார்கள், நாட்டைஒரு போதும் பிளவுபடுத்த விட மாட்டோம்,

பெற்றோர் விரும்பிய மொழி போதனாமொழியாக யிருக்கும். சிங்களமக்கள் தமிழ்மொழி மூலம் கல்வி கற்க விரும்பினால் தமிழி

| | |
|---|---|
| 30 M 0847 | 32 N 7059 |
| 10 R 0969 | 05 D 0945 |
| 23 K 0398 | 33 Q 0375 |
| 26 S 0033 | 24 V 0201 |
| 22 Y 0380 | 31 Q 0775 |
| 19 S 0122 | 34 N 0055 |
| 14 X 0557 | 31 K 0175 |
| 22 V 0368 | 30 D 0486 |
| 27 J 0718 | 20 X 0791 |
| 22 Y 0171 | 20 U 0967 |
| 33 X 0197 | 35 E 0312 |
| 25 Y 0767 | 28 P 0509 |
| 37 D 0450 | 02 W 0336 |
| 32 T 0071 | 15 C 0685 |
| 36 J 0632 | 28 D 0449 |
| 06 F 0563 | 23 M 0185 |
| 35 M 0188 | 19 J 0136 |
| 09 Q 0229 | 30 O 0414 |
| 10 U 0546 | 22 S 0180 |
| 28 E 0141 | 23 T 0875 |
| 32 B 0897 | 23 M 0552 |
| 27 E 0682 | 12 O 0634 |
| 31 U 0873 | 23 B 0665 |
| 23 S 0944 | 23 Z 0944 |
| 21 L 0741 | 25 F 0153 |
| 03 O 0784 | 37 Z 0555 |
| 29 N 0981 | 33 Y 0499 |
| 09 L 0901 | 22 X 0772 |

25 A 0533

(இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

லும், தமிழ்மக்கள் சிங்களம் கற்க விரும்பினால் சிங் களத்திலும் கல்வி கற்க லாம். 1951ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கல்வித் திருத்தச் சட்டத்தையே நாம் அமுல் நடத்துவோம் இதில் எதுவித மாற்றமும் செய்யவில்லை.

4-ம் பக்கம் பார்க்க

கொண்மனும் வருகிறார். நியமன எம், பி, அசீஸும் மற்றும் சில பாராளுமன்றக் காரியதரிசிகளும் இங்குவரு வார்களென எதிர்பார்க்கப் படுகிறது:

அமைச்சர்களை வரவேற் பதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சியைச் சேர்ந்த திரு. எம். துரைராசா, லங்கா சம சமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. விசுவநாதன் எம். எம். ஸி, மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி வடபிரந்தியச் செயலாளர் திரு வி பொன்னம்பலம் ஆகியோர் கவனித்து வரு கின்றனர்.

— —

## கலாசார ஆலோசனை சபை

கோட்டை, திங்கள்

நாட்டின் கலாச்சார விஷ யங்கள் தொடர்பாகவும், ஆலோசனைகள் வழங்க உயர் மத்திய ஆலோசனைச் சபையொன்றை கலாச்சார அமைச்சர் திரு. குலத் திலகா நிறுவியுள்ளார்.

16 அங்கத்தவர்களைக் கொண்ட இந்த உயர் மத் திய ஆலோசனைச் சபை

4-ம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாண பகுதியில் பஸ்கள் பழுதடைந்தன

## காரணம் தெரியவில்லை என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணபகுதியில் நேற்றுபல இடங்களில்பஸ் கள் திடீரெனபழுதடைந்ததால், பிரயாணி கள் மிகவும் கஷ்டமடைந்தனா. சில பகுதி களுக்குசுமார் மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கூட பஸ்கள் ஓடவில்லை. இதனால் பிரயாணிகள் புகைவண்டி மூலமும் தனிப் பட்டவான்கள் மூலமும் பிரயாணம் செய் தார்கள்.

இது பற்றி இலங்கை போக்குவரத்து சபை அதி காரி ஒருவரை கேட்ட போது பஸ்கள் திடீரென பழுதடைவதற்கு காரணம் தெரியவில்லையென்றும் இது பற்றி விசாரணை செய்து வருவதாகவும் கூறினார்.

பிரயாணிகள் நீண்ட நேரம் கியூவில் நின்றனர் சிலர் பிரயாணம் செய்ய முடியாமல் வீடு திரும்பினர் கள் நேற்று முன்தினம் மாலை 4மணி முதல் பஸ் சேவை சரிவர நடைபெற வில்லையென பல பிரயாணி கள் தெரிவித்தனர்.

மாலை 4மணி முதல் 6மணி வரை யாழ்ப்பாணத்திற் கும், கொடிகாமத்திற்கும் பஸ்கள் ஓடவில்லையென்றும் இதுபற்றி உடனடியாக மேலிடத்திற்கு புகார் செய் ததாகவும, தென் யாழ்ப் பாணம் பஸ் பிரயாணிகள் சங்க உப தலைவர் திரு. ஏ. கந்தையா தெரிவித்தார்

நேற்று முன்தினம் இர ட்டைதட்டு பஸ் ஒன்று கொடிகாமம் செல்லும் வழி யில் பழுதடைந்ததாகவும், நேற்றுகாலை கொடிகாமத் தில் ஒரு பஸ்சும், சாவகச் சேரியில் ஒரு பஸ்ஸும் பழு தடைந்ததாகவும், மீசாலை பஸ் பிராணிகள் சங்க தலை வர் தெரிவித்தார்.

பஸ்களில் போதிய இட மிருந்தும், பிரயாணிகளை ஏற்றாமலும் சில பஸ்கள் செல்வதாகவும், சில பிரயா ணிகள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பஸ் நிலையத் தில் பஸ்கள் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்பட வில்லையென்றும், இதனால் கியூவில் நீண்ட நேரம் நிற் கும் பிரயாணிகள் ஏமாற்ற மடைகின்றனரென்றும்சாவ கச்சேரி நகரசபை தலைவர் திரு. சு. கனகரத்தினம் மேலிடத்திற்கு புகார் செய் துள்ளார். பஸ்களை, சாரதி கள் பிரதான வீதி அருகே நிறுத்துகிறார்களென்றும், கியூவுககு அருகில் நிறுத்து வதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

### முறைப்பாடு பதிவு

யாழ்ப்பாணம் பஸ் நிலைய த்தின் சீர்கேட்டைப் பற்றி புள்ளிவிபரம் சேகரிப்பத ற்கு, கொழும்பிலிருந்து வந்த அதிகாரி நேற்று பஸ் நிலையத்தில், பல பிரயாணி களின் முறைப்பாடுகளை பதிவு செய்தார்,

சேவையிலீடுபடாத பஸ்களும், பழுதடைந்த பஸ்களும், யாழ். பஸ் நிலை யத்தில் நிறுத்தப்பட்டுள்ள தால் பிரயாணிகள் கஷ் டப்படுவதாகவும், தூர இடத்து பிரயாணிகள் தங் கள் செல்வதற்கு வசதியான

(4-பக்கம் பார்க்க)

# 'சிறுபான்மையினரின் பிரச்சினையை கூட்டரசாங்கம் தீர்த்துவைக்கும்'

யாழ்ப்பாணம், திங்கள்

பிரிவினை மனப்பான்மை யை வைத்து தேர்தலில் போட்டியிட்டு இலங்கை மக்களைகூறுபோட முயற்சிப் பவர்களுக்கு கூட்டரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்தின் மூலம் நல்ல பதிலடி கொடு த்திருக்கிறது. இதனால் பிரி வினை எண்ணங் கொண்ட கட்சிகளுக்கு எதிர்காலத் தில் இடமில்லையென்பது நிச்சயமாகிவிட்டது.

நியமன எம், பி, திரு. எம். சி. சுப்பிரமணியத் திற்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் யாழ் மாநகர சபை உறுப்பினர் புறக்டர் ஏ. விஸ்வநாதன் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் சன்மார்க்க வாலிபர் சங்கத்தினரால் அளிக்கப் பட்ட இவ்வரவேற்பிற்கு திரு, என். சி. குருநாதன் தலைமை வகித்தார்.

யாழ் நாகவிகாரை புத்த குரு வண கே. தயா வாச தேரோகூறியதாவது:

சிறுபான்மை தமிழரின் நலனைக் கவனிப்பதில் கூட் டரசாங்கம் அதிக கவனம் செலுத்திவருகிறது. சிறு பான்மை உறுப்பினரான திரு. சுப்பிரமணியத்திற்கு ஆட்சி மன்றத்தில் நியமன எம். பி. பதவி வழங்கியது இதற்கு எடுத்துக்காட்டா கும், இந்த அரசாங்கம் சிறுபான்மை இனத்தவரின் பிரச்னைகளைப்பாகுபாடின்றி கவனிக்கும்

சகல மககளும் இந்நாட் டில் எந்தவித பாகுபாடு மின்றி ஒற்றுமையாக வாழ கூட்டரசாங்கம் வழிவகுக் கும்.

வாலிபர் சங்க சார்பில் கவிஞர் இ, ஐயாத்துரை வாழ்த்துரை வழங் கினார். சிறுபான்மை தமிழர் மகாசபை நிர்வாக செயலாளர் திரு. சி? செல் லையா, ஜனாப் எம். இ,பசீர் திரு, எம். வி. செல்வத் துரை ஆகியோர் சொற் பொழிவாற்றினார்கள்.

இந்தோனேஷியாவின் பழைய அதிபர்

# டாக்டர் சுகார்னோ காலமானர்

ஜாகர்த்தா ஜூன் 21

**இந்தோனேஷியாவின் முன்னாள் அதிபர் டாக் டர் சுகார்னோ காலமானார். அவர் கடந்த சில தினங்களாக வ உடல் நலக்குறை வால் பாதிக்கப்பட்டிருந்தார்.**

**சுகார்னோவுக்கு இரத்த அழுத்தமும் கிட்னி கோளாறும் ஏற்பட்டிருந்தது:**

டாக்டர் சுகார்னோ 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் திகதி இந்தோனேஷி யாவின் அதிபரானார்; இந் தோனேஷியாவின் விடுதலை க்கு அவரே முன்னோடியாக இருந்தார். 1960ம் ஆண்டு இந்தோனேஷிய ராணுவத் தின் சர்வாதிகாரியாகவும் அவர்பொறுப்பேற்றார்1963 ஆண்டு இந்தோனேஷியா வின் ஆயுட்கால அதிபராக பிரகடனப் படுத்திககொண் டார்.

பின்னர் ஏற்பட்ட ராணு வப் புரட்சியின் போது அவர் தமது முழு அதிகா ரங்களையும் மக்கள் பொதுச் சபையிடம் ஒப்படைத்தார் 1967ம் ஆண்டுமுதல் அவர் வீட்டுக் காவலில் இருந்து வந்தார். டாக்டர் சுகார்னோ வுக்கு 69 வயதாகின்றது.

சுகார்னோவின் மறைவு குறித்து ஆசியத் தலைவர் கள் புகழ் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். தென்கிழக் காசியாவில் தலைசிறந்த தலைவர் ஒருவரை இழந்து விட்டதாக அனுதாபச்செய் தியில் பலநாட்டுத் தலைவர் களும் தெரிவித்துள்ளனர்.

மலேசியப்பிரதமர் பார தப் பிரதமர் இந்திரா காந்தி,ராஷ்டிரபதி திரு வி. வி. கிரி ஆகியோரும் அனு தாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர். ஆசிய உல கில் பிரபல்யமான தலை வரை இழந்துவிட்டோம்' என்று அவற்றில் கூறப்பட் டுள்ளது.

சுகார்னோவின் பூதவுடல் ராஜமரியாதையுடன் அடக் கம் செய்வதென இந்தோ னேஷியா அரசாங்கம்முடிவு செய்துள்ளது. அவசரமாக கூட்டப்பட்ட மந்திரி சபைக்கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது. கிழக்கு ஜாவாவில் உள்ள சேமக்காலையில் அவரது அன்னைக்கு அருகே அவரது உடல் நல்லடக்கம் செய்யப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலின் பூந்தோட்டம் பார்ப்பதற்கும், தொட்டாட்டு வேலை செய்வதற்கும் சைக்கிள் வைத்திருக்கும் ஆள் தேவை. நேரில் மனேச்சரை சந்திக்கவும். 2158

பெண்களை நிர்வகிக்கக் கூடிய கணக்கு அனுபவமுள்ள பெண் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல.3107, மே/பா 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 3107

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் சில தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆர்வமுள்ள பெண்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஒரு கிராமத்துக்கு ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். (விண்ணப்ப முடிவு 30-6-70) FLOATERS, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2156

விற்பனையாளர்

எமது ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை, ரூபா 500/- பெறுமதியான வர்த்தகச் சைக்கிள் விற்பனையாளரின் பாவனைக்குக் கொடுக்கப்படுவதால் ரூபா 500 பிணை கட்டவேண்டும். சம்பளம் ரூபா 50/- தொடக்கம் ரூபா 75/- வரையும் நற்சான்றுப் பத்திரங்களுடன் 26-6-70 க்கு முன், மனேஜர், நல்லூர்றேடர்ஸ், 336, பருத்தித்துறை ரோட், முத்திரைச்சந்தை, நல்லூர், யாழ்ப்பாணம். 3118

## விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள CY 7000 தொடர்பிலக்கமுள்ள 'ஒஸ்டின் 16 x 4' விற்பனைக்கு உண்டு. மொடோன் பேணிச்சர் 79/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3112

கார்

ஆஸ்ரின் சமர்செற் கார் EY 9616 யாவும் புதிய சாமான்களுடன் திருத்தியமைத்தும் புதிய பற்றறி, 4 புதிய ரயர்களுடனும் விற்பனைக்கு உண்டு. விபரம் நேரில், செல்லம் ஸ்டோர்ஸ், 154, மெத்தைக் கடை, பருத்தித்துறை. 3111

தோணி

44 அடி நீளம், 7 3/4 அடி அகலம் கொண்ட 9 டன் புதிதாகச் செய்யப்பட்ட தோணி விற்பனைக்குண்டு.

## விற்பனைக்கு

தராசு

எமது சங்கப் பாவிப்பிலிருந்த 5 அந்தர் நிறுக்கக் கூடிய தராசொன்று விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 13-7-70-க்கு முன் தொடர்புகொள்ளவும். போயாதினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்வையிடலாம். தலைவர், நுணசை ப. நோ. கூ. சங்கம், மாதகல். 2152

நெற்காணி

கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலில் இருக்கும், நீர்ப்பாசன வசதியுள்ள பத்து ஏக்கர் நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல:3110, மே/பா 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 3110

இராமநாதன் கல்லூரிக்கு அருகாமையில், உடுவில் ரோட்டில் குடியிருப்பு பகுதியில், சகல வசதிகளையும் கொண்ட காணி 2, 3, 4 பரப்புகளாக பிரித்து விற்பனைக்குண்டு விபரங்களுக்கு 61, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3116

## வகுப்புகள்

எமது பாடசாலையில் றேடியோ மெக்கானிஸ்சம் சிறந்த முறையில் 4 மாதங்களில் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாலை நேர வகுப்புக்களும் உண்டு. விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 5-7-70. விபரங்களுக்கு எழுதவும். நேஷனல் றேடியோ ஹேம், 11/A, மொம்சாக் மேல்மாடி, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3114

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள கடையொன்று வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு 61, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் 3115

### TUITION

G. C. E. (O. L') Examination December 1970 English Tuition Conducted by retired English Teacher. Apply in person: G. B. D. Nesamanickam, B. A. (Lond) 'Rajeswary Bhavanam (near Parameshwara College) Tinnavely, Jaffna. 3117

## வியாபாரம்பெருக

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### சோலைவரி 2-ம் கந்தாயம் 1970

1970-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1970-ம் ஆண்டு ஜூன்மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகராட்சி மன்ற ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-6-70-ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும் பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

1970-ம் ஆண்டு வரிமதிப்புககு எதிராக ஆட்சேபனை தெரிவித்துள்ள வரியிறுப்பாளர்கள் கூட, இந்த அறிவித்தலின் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டுமெனத் தயவுடன் வேண்டப்படுகின்றனர். ஆட்சேபனைகள் ஆராயப்பட்டு, வரி குறைப்பு அளிக்கப்பட்டால், கட்டிய சோலைவரிப் பணத்தில் கூடுதலாகச் செலுத்திய பணம் மற்றக் கந்தாயங்களின் சோலைவரிப் பணத்திற்கு வரவு வைக்கப்படும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம், யாழ்ப்பாணம்
18-6-70 2321

## மனேஜர் தேவை

எமது சங்கத்துக்கு 1-8-70 ல் இருந்து மனேஜர் தேவை. பின்வரும்நிபந்தனைகளுக்கு அமைவானவர்கள் தகைமைப்பத்திரங்களின் பிரதிகளுடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் "காரியதரிசி கண்டாவளை ப. நோ. கூ, சங்கம், கண்டாவளை" என்ற முக

அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டம்

# யாழ். மாநகரசபைக் கோஷ்டி இறுதிப் போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின், அரை இறுதியாட்டத்தில் போட்டியிட்ட, யாழ். மாநகரசபைக் கோஷ்டி காங்கேசன்துறை சிமேந்துக் கோஷ்டியைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு விளையாடுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி ஆரம்பமாகியதும் இரு கோஷ்டிகளும், மிகவும் கடுமையாகவே போட்டியிட்டன, இடைவேளைக்கு இரு நிமிடங்கள் இருக்கும் போது மாநகரசபைக கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் அகஸ்ரின் ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் ரசிப்பாக இருந்த போதிலும், மாநகரசபை கோஷ்டியின் முன்னணி வீரர்கள் இடைவிடாது எதிர்க் கோஷ்டியின் கோல்வாயிலை நோக்கி முன்னேறிய வண்ணமே இருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் மநகரசபை முன்னணி வீரர் அகஸ்ரின் மீண்டும் ஒரு கோலை மிக அழகாக தலையால் அடித்தார். இதன் பின் சிமேந்துக் கோஷ்டி சற்று வேகமாகவே விளையாடத் தொடங்கிய போதிலும், இவர்கள் பல கோல்களைப் போடும் கட்டங்களை நழுவ விட்டனர். இருந்தும் இக்கோஷ்டியின் முன்னணி வீரர் என். சிவராசா திடீரென ஒரு கோலைப் போட்டார். இதையடுத்து மீண்டும் மாநகரசபைக் கோஷ்டியின் வீரர் அகஸ்ரின் மூன்ருவது கோலைப் போட்டார்.

ஆட்டமுடிவில் மாநகரசபைக் கோஷ்டி, பலம் கொண்ட சிமேந்துக் கோஷ்டியை 3—1 கோல்களால் தோற்கடித்தது.

யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சற் சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### இறுதிப் போட்டி

இந்தச் சுற்றுப் போட்டியில், 'ஏ' பிரிவில் தெரிவு செய்யப்பட்ட தபால் கோஷ்டியும், 'பி' பிரிவில் தெரிவு செய்யப்பட்ட, யாழ் மாநகரசபைக் கோஷ்டியும் மிகவிரைவில் சாம்பியன் போட்டியில் மோதவிருக்கின்றன. (தே. நி)

## உலகஉதைபந்தாட்டத்தில் மேற்கு ஜெர்மனி 3-வது

மெக்ஸிக்கோ, ஜூன் 21

உலக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்துக்காக, மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், மூன்ருவது, நாலாவது இடத்தைப் பெறுவதற்காக நடைபெற்ற போட்டியில் மேற்கு ஜெர்மனி, உருகுவேயைத் தோற்கடித்து மூன்ருவது இடத்தைப்பெற்றுக்கொண்டது.

1966-ம் ஆண்டில் இங்கிலாந்தில்நடைபெற்ற, உலக உதைபந்தாட்டப் போட்டியில், மே. ஜெர்மனி இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது, என்பதுகுறிப்பிடத்தக்கது. (தே: நி)

## "சங்கானைக்கு விளையாட்டரங்கம் இல்லாதது குறை"

சங்கானை, ஞாயிறு

"விளையாட்டுக்களில் எவரெவர் கூடிய பயிற்சிபெறுகிருர்களோ அத்துறையில் அவர்கள் வெற்றியை ஈட்டுகின்றனர். எனவே தோல்வியுறுவோர் மன வேதனை கொள்ளாது அடுத்துவரும் போட்டிகளில் வெற்றியீட்டுவோம் என உறுதிகொள்ள வேண்டும். போட்டிகளில் வெற்றியும் தோல்வியும் சர்தாரணமானவை. இவைகளை மனதிற்கொண்டு வீண் குரோதங்களை வளர்ப்பதை விட்டுவிடவேண்டும்."

இவ்வாறு யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் திரு. கே. சச்சிதானந்தம் சங்கானை மாலியவத்தை விளையாட்டுக் கழகம் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. ரி. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. து சச்சிதானந்தன் தொடர்ந்து பேசுகையில் "சங்கானைக்குச் சிறந்த ஒரு விளையாட்டரங்கு இல்லாதது வருந்தத்தக்கதென்றும், இதனைக் [illegible] நிவர்த்தி [illegible] துமக்கள் உதவுவார்களென நம்புவதாகவும் தெரிவித்தார். கென 13ஆயிரம் ரூபா பட்டினசபையில் உண்டென்றும், இன்னும் 10 ஆயிரம் ரூபா வரையில் தேவைப்படுவதால்தான் சொந்த விளையாட்டுத்திடல் அமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதென்றும் சொன்னர்.

வட்டுக்கோட்டை எம்.பி திரு. ஏ. தியாகராசாவும் சமூகமளித்திருந்தார்.

வெற்றியீட்டியவர்களுக்கு திரு. சச்சிதானந்தம் பரிசில்கள் வழங்கினர்.

## விளையாட்டுப் போட்டி

உரும்பராய், ஞாயிறு

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை இல்லங்களின் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 27ந்திகதி உடுவில் வட்டார கல்வியதிகாரி

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 8-ம் திகதி [22-6-70]

**மேஷம்**- வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும், முன்னேற்ற வழியும் தோன்றும்.

**ரிஷபம்**- சிலருக்கு திடீர் திரவியலாபமும் கிடைக்கும். கலகலப்பான தினம்.

**மிதுனம்**- தவறுகள் நடக்கலாம். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

**கடகம்**- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு

உடுவில் வட்டாரம்

# தமிழ்த்தினவிழா போட்டி முடிவுகள்

உரும்பராய், ஞாயிறு

உடுவில் வட்டாரப் பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழ்த்தின விழாப் போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:

**அ பிரிவு-3ம், 4ம் தரங்கள்**

பிரதிபண்ணல்: வ. குபேந்திரராணி உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, பெ. மகேந்திரன் இணுவில் அமரிக்கமிஷன்பாடசாலை, பொ. சற்குணேஸ்வரி சுதுமலை வடக்கு த. க. பாடசாலை.

உரத்துவாசித்தல்: அ. ஞானக்குமாரி உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, ச. பிரியதரிசினி மானிப்பாய் மகளிர் கல்லூரி, பா. குலதேவி தாவடி இந்து த. க. பாடசாலை

பா ஓதல்: மா. இராசேந்திரம் சுன்னாகம் கோட்டைக்காடு அ த. க. பாடசாலை, ச. வாசுதேவன் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, தி. வசந்தி உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

**இ பிரிவு-5ம், 6ம் தரங்கள்**

சொல்வதெழுதல்: இ. குமுதினி மானிப்பாய் மகளிர் கல்லூரி, ம. சிறிஸ்ரியன்றூபா நவாலி சென். பீற்றர். ரோ. க. த. க பாடசாலை, இ. கலா இந்திரை சுன்னும் இராமநாதன் கல்லூரி.

உரத்துவாசித்தல்: செ. சிவபாலன் இணுவில் அ. மி. த. க பாடசாலை, க. சுசீலா மானிப்பாய் மகளிர் கல்லூரி, ச. பிரேமவரதன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, சோ. சிவானந்தராசா குப்ளான் விக்கினேஸ்வர வித்தியாசாலை.

சொற்பொழிவு: சி பஞ்சலிங்கம் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசாலை, சோ. மைதிலி சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, ச. பிரேமவரதன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

பா ஓதல்: சோ. மைதிலி சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, சி. லேகா இணுவில் அ. மி. த. க. பாடசாலை, ச. வசந்தி உடுவில் முருகமூர்த்திவித்தியாசாலை.

**உ பிரிவு 7-ம் தரம்**

சொல்வதெழுதல்: செ. தேவகி சுன்னுகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி, தா. சிவாஜினி சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, சி. சிவராணி கட்டுடை சைவவித்தியாசாலை.

கட்டுரை: பொ. தயாநிதி சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, சி. சிறீகலா கட்டுடை சைவவித்தியாசாலை. ந. கவனேஸ்வரி ஏழாலை வடக்கு அ மி த க பாடசாலை.

சொற்பொழிவு: நா. மகேஸ்வரன் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ப. நந்தினி சுன்னுகம்இராமநாதன் கல்லூரி, சு. தபோநிதி மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பா ஓதல்: அம்சவல்லி சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, ஐ. ஞானசுந்தரம் மானிப்பாய்இந்துக்கல்லூரி, சி. மகாலட்சுமி இணுவில் அ மி த க பாடசாலை.

நாடகம்: சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய்மகளிர்கல்லூரி.

மேற்படி போட்டியில் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்கள் மாவட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதி உடையவர்கள் என உடுவில் வட்டார கல்வி அதிகாரி திரு ச. இராசா அறிவித்தார்.

## ஆலய உற்சவம்

பண்டத்தரிப்பு. ஞாயிறு

இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலய உற்சவம் இம் மாதம் 23ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில், செல்லம் ஸ்டோர்ஸ்,
154, மெத்தைக் கடை,
பருத்தித்துறை. 3111

தோணி
44 அடி நீளம், 7 3/4 அடி அகலம் கொண்ட 9 டன் புதிதாகச் செய்யப்பட்ட தோணி விற்பனைக்குண்டு.
167, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். 3113

Nesamanickam, B. A. (Lond)
'Rajeswary Bhavanam (near Parameshwara College) Tinnavely, Jaffna. 3117

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சி
ஜெய்சங்கர்
தேவிகா, நாகேஷ்
நடித்த
தெய்வீக உறவு

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த





ஜர் தேவை. பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவானவர்கள் தகைமைப்பத்திரங்களின் பிரதிகளுடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் "காரியதரிசி கண்டாவளை ப. நோ. கூ. சங்கம், கண்டாவளை" என்ற முகவரிக்கு 30-6-70 க்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

நிபந்தனைகள்

1. விண்ணப்பக்காரர் 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
2. சி. பா. த. ப. பரீட்சை அல்லது க. பொ. த. ப. பரீட்சை இவற்றுளொன்றில் கணிதம், மொழி, இவற்றில் சிறப்புச் சித்தியுடன் ஒரே முறையில் சித்தியடைந்தவராயும்
3. கூட்டுறவுப்பயிற்சிபெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

மாத வேதனம் | ரூபா $\frac{150—300}{120 \times 15}$

பிணை ரொக்கம்:
ரூபா 2000/-
ஆதனம் ரூபா 3000/-

கு—பு தேர்ந்தெடுக்கப்படுபவரின் சேவை நலன் நோக்கி வேதனம் கூட்டியும் கொடுக்கப்படலாம்.

ச. விசுவலிங்கம்
தலைவர்

கண்டாவளை.
20-6-70 2320


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர் - கே. ஆர் விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-பத்மினி
நடித்த
திருவருட்செல்வ
[ஈஸ்ட்மன் கலர்]

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya-Pre. Poya 10.30 a.m.
Clint Walker
Akim Tamiroff
in
THE GREAT BANK ROBBERY
(Technicolor)
(இதற்கு முன் வெளிவராத புதிய படம்)


## போட்டி

உரும்பராய், ஞாயிறு
இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை இல்லங்களின் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 27ந்திகதி உடுவில் வட்டார கல்வியதிகாரி திரு. ச. இராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தருமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

— —

## யுவானியார் திருநாள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு
இளவாலை பெரியவிளான் புனித யுவானியார் திருநாளுக்கான நவநாட்கள் நடைபெற்று வருகின்றன. 24-ம் திகதி திருநாட்பூசையுடன் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும்நடைபெற்று திருநாள் பூர்த்தியடையும்.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
## 22-6-70 திங்கள்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, படப்பாட்டுக்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 61 மீ.
12-00 நண்பகல் இசை, 1-00 மாதர் கேட்டவை,
மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளம் ஆராய்வாளர்
இரவு 6-10 மெல்லிசை, 6-15 பாமாலை, 7-15 வீணை 7-45 விளையாட்டுத் தொகுப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நீங்கள் கேட்டவை.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரி-போயா, போயா 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
மாடப்புறா

REGAL JAFFNA
Daily 4 Shows
[Jim Brown]
Raquel Welch
in
100 RIFLES
(Adults only


பேசுகையில் "சங்கானைக்குச் சிறந்த ஒரு விளையாட்டரங்கு இல்லாதது வருந்தத்தக்கதென்றும், இதனைக் கூடிய சீக்கிரம் நிவர்த்தி செய்யப் பொதுமக்கள் உதவுவார்களென நம்புவதாகவும் தெரிவித்தார்.

அடுத்துப் பேசிய சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. சி. வைரமுத்து விளையாட்டு மைதானத்திற்

## விளையாட்டுப் போட்டி

மானிப்பாய், ஞாயிறு
நவாலி தெற்கு கொத்துக்கட்டி வாலிபர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 25ந் திகதி நடைபெறவிருக்கிறது

— —

## புதிய நிர்வாகிகள்

ஊரெழு, ஞாயிறு
ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கப் புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. கதிரவேலு, செயலாளர்: திரு அ. காராளசிங்கம், பொருளாளர்: திரு. சி. சி. நடராசா, உப-தலைவர்கள்: திருவாளர்கள் ச. செல்வரத்தினம், க. சேனாதிபதி, உப-செயலாளர்: திரு. மு. சங்கரப்பிள்ளை.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் க. துரைராசா, இ. கிருஷ்ணபிள்ளை, வ. குலநாயகம், செ ஸ்ரீஸ்கந்தராசா, ப. ஜெயரத்தினம்.

— —

## மூளாய் ச, ச. நிலையம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
மூளாய் சனசமூக நிலையத்தின் கலைவிழாவை அடுத்த மாதம் நடத்துவதென்றும் விழாவுக்குத் தலைமைவகிக்க தபால் அமைச்சர் திரு. செ குமாரசூரியரை அழைப்பதென்றும் தலைவர் திரு. க குமாரசாமி தலைமையில் நடைபெற்றநிலைய நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அயல்கிராம மாணவர்கள் உயர் கல்விக்காகத்தொலைவிலுள்ள கல்லூரிகளுக்குச் செல்வதில் பெரிதும் கஷ்டமடைவதால் விக்ரோறியா கல்லூரியில் உயர் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்திஉதவுமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திரளியலாபமும் ...கும். கலகலப்பான தினம்.

மிதுனம்- தவறுகள் நடக்கலாம். சிலருக்கு அன்னியவாசம் ஏற்படலாம்.

கடகம்- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும்.

சிம்மம்- வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம்செலுத்தவும்

கன்னி- புண்ணிய காரியங்களில் ஈடுபடுபவீர்கள். பொதுமக்களின் மதிப்பு கிட்டும்.

துலாம்- புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

விருச்சிகம்- நீண்ட நாள் கொடுக்கல்வாங்கல் இன்று நிவர்த்தியாகும். பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்.

தனுசு- பொருள் முடை தென்படும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம்.

மகரம்- அவசர முடிவினால் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும், பூமிப்பிணக்கை தவிர்க்கவும்.

கும்பம்- சொகுசான நாள் இன்று மிகவும் குஷியாக இருப்பீர்.


மீனம்- நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## 'விவாக சகாயப்பணம்'

பண்டாரவளை, ஞாயிறு
"விவாக சகாயப்பணம் சம்பள அடிப்படையில்லாது விவாகமான எல்லோருக்கும் சமமாகக் கொடுக்க வேண்டும்என்ற தீர்மானம் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பண்டாரவளைக் கிளையின் வருடாந்த மகாநாட்டில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

இம்மகாநாட்டுக்கு திரு. மு. பெருமாள் தலைமை தாங்கினார்' அவர் தமது தலைமையுரையில் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றம் ஆசிரியர்கள் கையில் தான் தங்கியிருக்கிறது என்றும் ஆசிரியர்களின் ஒற்றுமைதான் அவர்களை வாழவைக்கும் என்றும் ஆசிரிய சேவைக்குழு ஒன்று அவசரம் அமைக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினார். புதுவருடச் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.



## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயத்துறை தலைமைப்பீடப் போதனாசிரியராய் இருந்து நுவரெலியா மாவட்ட விவசாய அதிபராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்ட திரு. எஸ். தவராஜவேலுக்கு யாழ்ப்பாண செயலகப் பூங்காவில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத்துறையில் அவர் ஆற்றிய சேவைகளையும் அவரது அயராத உழைப்பையும் பாராட்டி யாழ்ப்பாணமாவட்ட விவசாயப் பகுதி அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் பேசினார்.

வவனியா கமத் தொழில் பாடசாலை அதிபராகப்பதவி ஏற்றுச் செல்லும் திரு. ஆனந்தவேலுக்கும் பிரிவுபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது.

இவர்களைப்பாராட்டி திரு எம். தருமராசா, திரு இரத்தினசபாபதி ஆகியோர் ஆசி வழங்கினர்.


KALANILAYA CAMBRIC
கலாநிலைய கேம்பிறிக்
WRITING PADS
'லெற்றர் பாட்ஸ்'
நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு
மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:
'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
55, வைரவகோவில் வீதி — யாழ்ப்பாணம்.
சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் 18 பேர் கொண்ட கன்சர்வேடிவ் மந்திரிசபை பதவி ஏற்பு

லண்டன், ஜூன் 21

**பிரிட்டிஷ் புதிய பிரதமர் திரு. எட்வார்ட்ஹீத் 18 பேர் கொண்ட மந்திரி சபையை அறிவித்திருக்கிறார். பிரிட்டனில் 13 ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்டுள்ள மிகச் சிறிய மந்திரிசபை இதுவாகும் என்று கருதப்படுகின்றது.**

திரு. ஹீத்தின் மந்திரி சபையில் திரு. றெஜினல்ட் மோல்டிவ் இரண்டாவது இடத்தை வகிக்கிறார். உள்நாட்டமைச்சுக்கும், குடிவரவு குடிஅகல்வு துறைக்கும் இவர் பொறுப்பாக விருப்பார். கட்சியின் துணைத் தலைவராகவும் இவரே இருந்து வருகிறார்.

பிரிட்டனில் வெளிநாட்டவர்கள் குடியேறும் பிரச்னை இப்பொழுது பெரியபிரச்னையாக இருந்துவருகின்றது. வெள்ளையர் அல்லாதவர்களின் முடியேற்றத்தை முக்கியமாகவைத்தே இந்தத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றிபெற்றிருப்பதாகக் கருதப்படுவதால், திரு. றெஜினல்ட் மோல்டிங்கின் நடவடிக்கைகளை காமன்வெல்த் நாடுகளும், ஆசிய ஆபிரிக்க நாடுகளும் உன்னிப்பாகக் கவனித்து வரும் என்று கருதப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு காரிங்டன்பிரபு பொறுப்பாகப் போடப்பட்டிருக்கிறார். வெளிநாட்டமைச்சு ஹோம் பிரபுவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது திரு. ஹீத் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் இவரே தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் இருந்தார்.

திரு. அந்தனி பங்கர் காமன்வெல்த் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். நிதி அமைச்சுக்கு குயின்டன் பிரபு பொறுப்பாகவிருப்பார்.

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி பதவிக்கு வந்திருப்பது குறித்து தென்னாபிரிக்க பிரதம மந்திரி திரு. வோஸ்டர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். தென்னாபிரிக்காவுடனான ஒப்பந்தங்களை புதிய அரசாங்கம் மதிக்கும் என்றும், தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள்வழங்கும் என்றும் திரு. வோஸ்டா நம்பிக்கை தெரிவித்தார்.

### பிரதமரின் வாழ்க்கை

மாதம் அவர் கன்சர்வேடிவ் கட்சியின் உதவி கொறடாவாக நியமனம் பெற்ருர். 1955ம் ஆண்டு டிசம்பர் மாதம் அவர் மக்கள் சபையில் பிரதம அரசாங்க கொறடாவாகவும், முக்கிய பதவிகளைப் பொறுப்பேற்ருர். அதே சமயம்பிறிவுக் கவுன்சில் அங்கத்தவராக அவர் நியமனம் பெற்ருர்.

1959-ம்ஆண்டுஅக்டோபர் மாதம்திரு. ஹீத்தொழில்மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1960-ம் ஆண்டில் ஐரோப்பிய விவகாரங்களுக்கான வெளிநாட்டு ராஜாங்க மந்திரியாகவும் அவர் பொறுப்பேற்ருர். ஐரோப்பிய பொதுச்சந்தைக்கு பிரிட்டன் விண்ணப்பித்த காலத்தில் இதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு திரு. ஹீத் பொறுப்பாக இருந்தார் என்பறு குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய கவுன்சில் ஆலோசனை மகாநாட்டில் திரு. ஹீக் பங்குபற்றியதுடன் மாஸ்கோவில், பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கு மத்தியிலான அணுவாயுதத் தடை ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டார்.

பின்பு வர்த்தக மந்திரியாகவும் ராஜாங்க, கைத்தொழில் மந்திரியாகவும் நியமிக்கப்பட்ட அவர் 1964-ம் ஆண்டு மே மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற உலக வர்த்தக மகாநாடு ஒன்றிலும் பங்கு கொண்டார்.

1965-ம் ஆண்டு கன்சர்வேடிவ் கட்சித் தலைவராகவும் எதிர் கட்சித் தலைவராகவும் பொறுப்பேற்ற திரு. ஹீத், உள்நாட்டுப் பிரச்சனைகளைப் படித்தறிவதற்காக பிரிட்டன் முழுவதிலும் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார். ஐரோப்பா, தூர கிழக்கு, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற பிரதேசங்களுக்கும் விஜயம் செய்தார்.

திரு. ஹீத், இசைக் கலையில் பிரியம் உடையவர். 1963-ம் ஆண்டிலிருந்து லண்டன் கூட்டு வாத்திய இசை அரங்கில் தலைவராக இருந்து வருகிருர். அத்துடன் படகோட்டுவதிலும் அவருக்கு அலாதிப் பிரியம் படகோட்டுவதைத் தனது பொழுது போக்காகக் கொண்ட அவர் படகோட்டப் போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்றிருக்கிருர்.

# அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில்லை

## சீனுவின் முடிவு

ஹாங்காங், ஜூன் 21

அமெரிக்காவுடன் தூதர்கள் நிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை நிறுத்திவிடுவதற்கு சீன முடிவு செய்திருக்கின்றது.

கடந்த ஜூன் மாதம் ஆரம்பமான சீன-அமெரிக்க பேச்சுவார்த்தைகள் கம்போடியாவில் அமெரிக்கா தலையிட்டதைத் தொடர் மே மாதத்தில் நிறுத்தப்பட்டன. இப்பொழுது மீண்டும் இப்பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு சீன விரும்பவில்லை. அதற்கு இது தருணமல்லவென்று பீகிங் அறிவித்துள்ளது. உதவிகளைத் தொடர்வதில்லையென்று சீன முடிவு செய்திருப்பது குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்திருக்கின்றது.

# இந்து சமுத்திரத்தில் யு. எஸ், ரஷ்ய சப்மரீன் நடமாட்டம்

பம்பாய், ஜூன் 21

இந்துமகா சமுத்திரத்தில் சப்மரீன்களின் நடமாட்டம் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுபற்றி இந்தியா விழிப்பாக இருக்கவேண்டுமென்று மேற்கு பிராந்திய கப்பற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் என் கிருஷ்ணன் கூறியுள்ளார்.

இந்துமகா சமுத்திரபகுதியில் உள்ள நாடுகள் மிகவும் சிறியவை; அபிவிருத்தி அடையாதவை. எனவே இந்தியாவுக்கு உதவிஅளிக்கின்ற எந்தப் பெரும் வல்லரசும் அந்த உதவிக்குப் பதிலாக இந்துமகாசமுத்திரப் பிராந்தியத்தில் தளம் அமைக்காமல் இந்தியா கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்க-ரஷ்ய படைகள் இருப்பது யுத்தத்தின் கெடுபிடி என அவர்வர்ணித்துள்ளார்.

பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து ஒரு சப்மரீனை வாங்கியுள்ளது. பிரான்சிடமிருந்தும் 3 சப்மரீன்களை வாங்கியுள்ளது. சீனுவிடம் 33 சப்மரீன்களைக்கொண்ட படை இருக்கிறது. தொலை தூரத்தில் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகள் சீன சப்மரீன்களில் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'சுயநலத்துடன் ஆட்சி செய்கின்ருர்களே'

சேலம், ஜூன் 21

அதிகாரத்திலிருப்பவர்கள் சுயநலத்துடனும் அலட்சியமாகவும் நிர்வாகத்தை நடத்தி வருவதால் நாடு முழுவதும் கடுமையான நிலவரம் தோன்றியுள்ளது. தாங்கள் பதவியில் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்காக அரசுத்தலைவர்கள் நாட்டின் நலன்களைக் கூடத் துறக்கத்தயாராகவிருக்கிருர்கள் இந்நிலையில் மக்கள் நாட்டைக்காப்பாற்ற முன்வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் தலைவராக விளங்கியகாலஞ்சென்ற டாக்டர் விஜயராகவாச்சாரியாரின் 118 நாள் விழாவில் கலந்து கொண்டு பேசிய திரு. காமராஜர் மேற்கண்டவாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

...சினரின் செயல்கள் என்று கூறினர்.

—

சுதந்திரா

## எம். எல். ஏ. ராஜினமா

சென்னை, ஜூன் 21

சுதந்திராகட்சி எம். எல். ஏ. திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் தமது பதவியை ராஜினமா செய்தது பற்றித் தாம் வருத்தப்படுவதாக தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. கருணாநிதி நிருபர்களிடம்கூறினர். தாம்சார்ந்துள்ள கட்சிக்கே இந்தப் பதவியும் சொந்தம் என்று உணர்ந்து கட்சியிலிருந்து விலகியபொழுதே பதவியிலிருந்தும் விலகிய அவரது செயல்கண்டு நான் அவரை பாராட்டுகிறேன்.

— —

### தேசபக்தியா - தெய்வபக்தியா

### பாரதியார்கவிதைகளில்

### சிறைக்குப்போக விரும்பியவர்

சூரத், ஜூன் 21

பரோடா ஜில்லா [illegible] லின் [illegible] ணிகளை ஏற்றிச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தீவுப் பகுதிக்கு

# அமைச்சர்களை அழைக்க சர்வோதய முன்னணிமுடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

சர்வோதய அரசியல் முன்னணியின் புங்குடுதீவுக் கிளையின் செயற்குழுக் கூட்டம் திரு. க. கந்தப்பு தலைமையில் நடைபெற்றபோது தீவுப் பகுதியின் உடனடித் தேவைகள் ஆராயப்பட்டதோடு பின்வருவனவற்றை உடனடியாக செயற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீவுப்பகுதிக்கு ஒரு பஸ் டிப்போ நிறுவுதல்; தீவுப் பகுதியின் பஸ் கட்டணங்களைக் குறைக்க முயற்சி எடுத்தல்; சேரிகளை ஒழித்துத் தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகள் அமைக்க உதவி செய்துகொடுத்தல்; சிறுபான்மையினர் பிரச்னைகளைத் தீர்க்கும் சட்டங்களை அரசாங்கம் கொண்டுவரத் தூண்டுதல்; புங்குடுதீவுக்கு இரு கிராமசபைகளை ஏற்படுத்த முயற்சியெடுத்தல்; புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயத்தை மத்திய மகாவித்தியாலயம் ஆக்க முயற்சியெடுத்தல், இன்னும் பல.

மேற்காணும் திட்டங்களோடு சகல அரசாங்க மந்திரிமார்களையும் தீவுப் பகுதிக்கு அழைத்து நிலைமையை விளக்குவதென்றும் பல அரசியல் பிரமுகர்களை வரவழைத்து அரசியல் நிலைமைகளை மக்களுக்கு விளங்க வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்தின் முடிவில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுப்பதென்றும், தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல், சமூக, பொருளாதார விழிப்பைத் தமிழ்பேசும் பகுதிகளிலும் தீவிரப்படுத்தச் சர்வோதய முன்னணி பிற முற்போக்குச் சக்திகளோடு சேர்ந்து உழைக்குமென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

# தேசிய வித்தியாலய அதிபர் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், திங்கள்

'இலங்கையில் இனமத மொழி வித்தியாசமின்றி பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும், அதிபர்களின் நலன் பாதுகாக்கவும் ஒரு சங்கம் கட்டாயம் இருப்பது அவசியம். இந்தத் தணியா ஆசையினுல் பல அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று இந்தச் சங்கத்தை அங்குரார்பணம் செய்கின்ருேம்.'

இவ்வாறு யாழ். தேசிய வித்தியாலய அதிபர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய உசன் மகாவித்தியாலய அதிபர் திரு.செ. சிவப்பிரகாசம் தமது தலைமையுரையில் கூறினர்.

தேசிய வித்தியாலய அதிபர்கள் சங்கம் என்ற பெயருடன் இப்புதிய சங்கம் உதயமாகியுள்ளது

திரு. சிவப்பிரகாசம் தொடர்ந்து பேசியதாவது: ஒரு சில கல்லூரி அதிபர்களை கொண்ட அதிபர்களின் சங்கம் ஒன்று இப்பொழுது இயங்கி வருகின்றது. அது பெரிய பாடசாலைகளின் முட்டுத்தீர்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இருந்தாலும் நாட்டுப்

உபதலைவர்கள்: பண்டிதர் செ. செ. சிவலிங்கம் (அதிபர் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்) திரு. வீ. விசுவலிங்கம் (அதிபர் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம்). உபகாரியதரிசி: திரு. ஏ. தருமலிங்கம் (உப அதிபர் கனகராயன்குளம் மகாவித்தியாலயம்)

9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கல்வி மந்திரியவர்களை பேட்டிகாண்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (கு. வி. ம)

— —

## இடமாற்றம்

அம்பன், ஞாயிறு

அம்பன் அரசினர் வைத்தியசாலையில் மருந்துகலவையாளர் அ. இரத்தினசிங்கம் துணுக்காய் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

— —

## கண்ணீர்ப் புகை; குண்டாந்தடிப் பிரயோகம்.

கோட்டை, ஞாயிறு

...றும், தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள்வழங்கும் என்றும் திரு. வோஸ்டா நம்பிக்கை தெரிவித்தார்.

## பிரதமரின் வாழ்க்கை சுருக்கம்

புதிய பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் அரசியல் வாழ்க்கை சரித்திரத்தின் சுருக்கம் வருமாறு.

திரு. ஹீத் 1916-ம்ஆண்டு ஜூலை 9-ம் திகதி புரோட்ஸ்டெயர்ஸ் என்னும் பட்டினத்தில் பிறந்தார். ஒரு பிரபல வர்த்தகரின் மகனுகப் பிறந்த அவர் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் அரசியல், பொருளாதாராம் தத்துவம் போன்ற துறைகளில் பட்டதாரிப் பட்டம் பெற்ருர். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் மாணவராக இருந்தபோது சர்வகலாசாலையின் கன்சர்வேடிவ் சங்கத் தலைவராக அவர் பணியாற்றினுர். ஒக்ஸ்போர்ட்டில் கல்வி பயின்ற இறுதி வருடத்தின் போது விவாத அரங்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு விவாதச் சுற்றுப் போட்டியில் பங்குகொண்டு சர்வகலாசாலைகளுக்கு விஜயம் செய்தார்.

சர்வகலாசாலைப் படிப்பு முடிந்ததும் அவர் அரசியலில் ஈடுபட்டு போலந்திற்கும் டான்சிக்கிற்கும் விஜயம் செய்தார். 1939ம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கிய போது யுத்த சேவையில் ஈடுபட விரும்பினுர்

இதனையடுத்து 1940-ம் ஆண்டில் ரோயல் பீரங்கிப் படையில் அவர் சேர்ந்து கொண்டார். யுத்தகாலத்தில் திறமையாகச் சேவையாற்றி இறுதியில் ஒரு பீரங்கிப்படை அணியின் லெப்டனன்ட் கேர்ணலாகி பதவி உயர்வுபெற்ருர். வடமேற்கு ஐரோப்பாவில் அவர் மேற்கொண்ட யுத்த சாதனைகளைக் கௌரவித்து அவருக்கு ''எம். பி. ஈ'' விருது வழங்கப்பட்டது.

யுத்தம் முடிவுற்றதும் திரு. ஹீத், சிவில் சேவையில் சேர்ந்து விமானப் போக்கு வரத்து அமைச்சில் பணியாற்றினுர். பின்பு அரசியல் வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்பிய அவர்தமது உத்தியோகத்தை ராஜினுமா செய்து கன்ச வேடிவ் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

1950 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு. ஹீத் பெக்ஸ்லி தொகுதியில் கன்சர்வேடிவ் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ருர். 1951ம் ஆண்டு பெப்ரவரி

### தேசபக்தியா - தெய்வபக்தியா

# பாரதியார்கவிதைகளில் எஞ்சி நிற்பது எது?

சென்னை. ஜூன்21

ஆத்திகர்களையும் நாத்திகர்களையும்கூட ஒரே அணியில் நிறுத்தி வைப்பது தேசபக்தியே பாரதியாரின் கவிதைகளில் முன்நிற்பது தேசபக்திதான் என்று தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பேசுகையில் எழுத்தாளர் ஜெயகாந்தன் குறிப்பிட்டார்.

இளைஞர் இலக்கிய மன்றத்தின் சார்பாக நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கவியரங்கம், பட்டிமன்றம், இசைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பட்டிமன்றத்தில் 'பாரதியின் கவிதைகளில் எஞ்சி இருப்பது தேச பக்தியா? தெய்வ பக்தியா?' என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது.

பாரதி கவிதைகளில் எஞ்சியிருப்பது தேசபக்தியே என்ற அணிக்கு ஜெயகாந்தன் தலைமை தாங்கினுர்.

அவர் தனது கட்சியை வலியுறுத்தி பேசுகையில், பாரதியின் கவிதைகளில் முன்நிற்பது தேசபக்திதான் எத்தனையோ கவிஞர்கள் தெய்வ பக்திப் பாடல்களைப் பாடினுர்கள். ஆனுல் அவர்களெல்லாம் பாரதியாரைப் போன்று மக்கள் உள்ளங்களில் இடம்பெறவில்லை பாரதி தெய்வ பக்தியைப் பற்றி பல பாடல்களைப் பாடி இருந்தாலும் தெய்வத்தை தேசமாக்கினுர் என்ருர்.

மேலும் அவர்பேசுகையில் தெய்வத்தைப் பற்றி பாரதி பாடினுலும் ஒவ்வொரு இடத்திலும் தேசம் தேசம் என்று தேசபக்தியையே முன் வைத்திருக்கிருர்.

ஆத்திகர்களையும் நாத்திகர்களையும் ஒரு அணியில் நிறுத்தி வைப்பது தேசபக்திதான், பாரதியின் கவிதைகளில் அதிகமாக இருப்பது தேசபக்திதான் என்றும் ஜெயகாந்தன் தனது கட்சியின் சார்பில் கூறினுர்.

'தீபம் ஏட்டின் ஆசிரியர் நா. பார்த்தசாரதி பாரதியின் கவிதைகளில் விஞ்சி நிற்பது 'தெய்வபக்தியே' என்ற அணிக்கு தலைமை வகித்து தனது கட்சியை வலியுறுத்திப் பேசுகையில் பாரதியார் ரஷ்யபுரட்சி பற்றி பாடிய பாட்டில்கூட மாகாளி பராசக்தி அருளினுல்தான் ஜெகப்புரட்சி ஏற்பட்டது என்று கூறியிருப்பது அவரது தெய்வபக்தியை எடுத்துக் காட்டுகிறது என்ருர். அவர் தனது வாதத்தை தொடர்கையில் பாரதி தெய்வபக்தியின் மூலம் தேசபக்தியை வலியுறுத்தினுர் என்று தனது கட்சியை வலியிறுத்தினுர்.

'தேசபக்தி' என்ற அணியில் மாணவர் தலைவர் தண்டாயுதபாணி, ஜெயகோபால், கவிஞர் கா. மு. ஷெரீப் ஆகியோரும் தங்களின் வாதத்திறமையை வெளிப்படுத்தினர்.

'தெய்வபக்தி' என்ற அணியில் கோவிந்தராஜன், பி. ஆர். லட்சுமிகாந்தன், குமரி அனந்தன் ஆகியோர் பேசுகையில் தங்களின் வாதத் திறமையைக் காட்டினுர்கள்.

நடுவராக இருந்த பி. சி. கணேசன் இருதரப்புவாதங்களையும் கேட்டுத் தீர்ப்பளித்தார். பாரதியின் கவிதைகளில் தெய்வபக்திஇருக்கிறது. ஆனுல் அவரது கவிதைகளில் அதிகமாக வலியுறுத்தப்படுதது தேசபக்திதான் என்று குறிப்பிட்டார்.

இன்றைய கால சூழ்நிலைக்கு பாரதியின் தேசபக்திப்பாடல்கள் எங்கும் நம் கண்முன்னுல் நிற்கின்றன அப்படிப்பட்ட தேசபக்திப் பாடல்களை தமிழ் மக்களும் மற்றவர்களும் தெருவெல்லாம் நாடெல்லாம் பாடி தேசபக்தியை வளர்க்க வேண்டும் என்று பி. சி. கணேசன் கேட்டுக்கொண்டார்.

— —

## சிறைக்குப்போக விரும்பியவர்

சூரத், ஜூன் 21

பரோடா ஜில்லாவில்டெரிலின் அணிகளை ஏற்றிச் சென்ற ஒருவாகனத்தை கொள்ளைக்காரர்கள் அபகரித்ததாக ஒருவர் பொய்ப் புகார் செய்தி குறித்து பொலிசார் விசாரணை நடத்தியதால் அப்புகார் பொய் யென தெரியவந்தது. உண்மையிலேயே அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றும். பொய்ப்புகார் கொடுத்தவர் வேலையில்லாமல் பல வருடகாலம் இருப்பவரென்றும்பொய்ப்புகார்கொடுத்த குற்றத்திற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் சிறைக்குசெல்லலாமெனவும் அங்கு பட்டினியில்லாமல் வாழலாமென நம்பியே அஜித்சிங் என்ற அந்நபர் பொய்ப்புகார் கொடுத்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

— —

## முழுக்குடும்பமே தற்கொலை

திருத்தணி, ஜூன். 21

திருத்தணித்திருக் குளத்தில் கயிற்றல் ஒன்ருகக் கட்டிப்பிணைக்கப்பட்ட ஆறு சடலங்கள் மிதந்து கொண்டிருக்கக்காணப்பட்டன.

கோதண்டராமன் அவருடைய மனைவி (வயது 36) பன்னிரண்டு வயதுக்குட்பட்ட நான்கு குழந்தைகளே குளத்தில் மிதந்து கொண்டிருந்தவர்களாவர். இவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று பஞ்சாயத்து விசாரணையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

— —

## பண்டத்தரிப்பில் முருங்கை நோய்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்புப் பகுதியில் கறிமுருங்கை மரங்கள் ஒருவித நோயினுற் பீடிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

முருங்கையில் பிஞ்சுப் பருவத்திலேயே காய்கள் காய்ந்து விழுகின்றனவென்றும் பல மரங்கள் இதே நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளமையால் முருங்கை காய்களுக்கு அங்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதென்றும் தெரிகிறது.

### இந்திய

# மந்திரிசபையில் மாறுதல் ஏற்படும்?

## சவானுடன் இந்திரா ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 21

இந்திய மத்திய அரசாங்கத்தின் மந்திரிசபையில் மாறுதல்கள் ஏற்படலாமென்று நம்பப்படுகின்றது. உள்துறை அமைச்சர் திரு. சவானுடன் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இதுபற்றி யோசனை கலந்தாரென்று நம்பப்படுகிறது.

காலி ஸ்தானங்களை நிரப்ப ஒன்று அல்லது இரண்டு முழு மந்திரிகளை நியமிப்பதுடன் பல துணைமந்திரிகளையும் நியமிக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. காங்கிரஸ் பிளவுபட்டபோது நாலு பெரிய மந்திரிகள் விலக நேர்ந்தது. அதைத் தவிர பிரதமர் இருதுணை மந்திரிகளையும் இரு உதவி மந்திரிகளையும் நீக்கி விட்டார் இதைத் தவிர ராஜ்ய சபைத் தேர்தலில் தோல்வியுற்றதால் இரு துணைமந்திரிகளும் ஒரு உதவிமந்திரியும் வெளியேற நேர்ந்தது. இவ்விதம் மந்திரிசபைக்குள் ஏற்பட்ட காலி ஸ்தானங்களுக்கு பிரதமர் இந்திரா காந்தி புதுமுகங்களைக் கொண்டுவரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் தலைவராக ... விளங்கியகாலஞ்சென்ற டாக்டர் விஜயராகவாச்சாரியாரின் 118 நாள் விழாவில் கலந்து கொண்டு பேசிய திரு. காமராஜர்மேற்கண்டவாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் ''வகுப்பு கலவரத்தையும் பிராந்திய வெறியையும் மொழிக் கலகத்தையும் கிளறிவிடுவோர்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம்தயாராக வில்லை, அதற்கு மாருக நாட்டுப் பற்றுக் கொண்டவர்கள் தொந்தரவுக்குள்ளாகிருர்கள். தங்கள் வழியைப்பின்பற்றுவோர் தான் பாதுகாக்கப்படுவரென்றும் மற்றவர்கள் எப்போதும்பயந்துகொண்டு வாழவேண்டும் என்றும் மக்கள் நினைக்குமாறு செய்வதாக இருக்கின்றன. அர...துள்ள கட்சிக்கு இந்தப் பதவியும் சொந்தம் என்று உணர்ந்து கட்சியிலிருந்து விலகியபொழுதே பதவியிலிருந்தும் விலகிய அவரது செயல்கண்டு நான் அவரை பாராட்டுகிறேன்.

## அருணகிரிநாதர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். வண்ணை, காங்கேசன் துறைவீதி அரசடி விநாயகர் இந்து இளைஞர் மன்றத்தினரால் அருணகிரி நாதர்விழா மன்றத் தலைவர் சு. லோகநாதன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

மன்றப் போஷகர் திரு. க கனகராசா ''கந்தவிரதமும் துதிப்பாடல்களும்'' என்னும் சிறியநூல் ஒன்றை அடியார்களுக்கு இலவசமாக வழங்கினுர். விழாவில் செல்வன்கள் து. தனபாலசண்முகன், இ.ஸ்ரீதரன், க. தயாளன், க. தேவமனேகரன் ஆகியோரும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள்.

— —

## புலிக்கு புட்டிப்பால்

ப்ரீமன், ஜூன் 21

புலிக்குட்டிக்குப்பால் கொடுத்து வளர்க்கிருர் இந்தியப் பெண் ஒருவர். மேற்கு ஜெர்மன் குடியரசில் ப்ரீமன் நகரில் விலங்குக்கண்காட்சிச் சாலையில்ஒரு சைபீரியப்புலி 3 குட்டிகளை ஈன்றது. இது குறைப்பிரசவமானதால் இரண்டு குட்டிகள் இறந்து விட்டன. மற்றக் குட்டியை கவனிக்கும் அளவுக்குதாய்ப் புலிக்கு உடலில் வலு இல்லை விலங்குக் கண்காட்சி டைரக்டரின்மனைவி ஜாய்சிமன்ரோ (இவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்) புலிக்குட்டிக்குப் புட்டிப்பால் கொடுத்து வளர்த்தார். புலிக்குட்டிக்கு சிறிது நாளில் வலு வந்ததும் தாயுடன் போய்ச் சேர்ந்து கொண்டது.

— —

## இவர்கள் திட்டம்

கல்கத்தா, ஜூன்21

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இந்தியாவில் ஆட்சி நடத்தப் போவதாக நக்ஸல்பாரி கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

— —

## தமிழில் விண்ணப்பப் படிவங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகர் சுதந்திரக்கட்சிக் கிளைக்குத் தலைமைக் கட்சியிலிருந்து தமிழில் அங்கத்துவ விண்ணப்பப்படிவங்கள் கிடைத்துள்ளன. வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த காரைநகரில் அதிகமான வாலிபர்கள் சுதந்திரக் கட்சிக் கிளையில் சேர்ந்து வருகிருர்களெனக் கிளைத் தலைவர் திரு. எஸ். ஆர் எஸ். தேவதாசன் தெரிவித்தார்.

இக்கிளை பெருமளவில் விஸ்தரிக்கப்பட்டு வருவதாகவும், காரைநகர்க் கிளையுடன் சேர்ந்து வட்டுக்கோட்டைத் தொகுதியிலும் பல கிளைகள் ஏற்படுத்த ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகவும், இதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்து வருவதாகவும் திரு. எஸ். ஆர். எஸ், தேவதாசன் தெரிவித்தார்.

0 0 0

சில கல்லூரி அதிபர்களை கொண்ட அதிபர்களின் சங்கம் ஒன்று இப்பொழுது இயங்கி வருகின்றது. அது பெரிய பாடசாலைகளின் முட்டுத்தீர்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இருந்தாலும் நாட்டுப்புற வித்தியாலயங்கள் அச்சங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தேசிய அடிப்படையில் இச்சங்கம் சிங்கள இஸ்லாமிய அதிபர்களையும் இணைத்து சீர்பெற்ற முறையில் வீறுநடைபோட வேண்டுமென்று விரும்புகின்ருேம். இன்றைய கௌரவ கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்து கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினுர். கல்வியில் பாரபட்சமற்ற முறையில் பாடசாலைகள் நடாத்தப்பட வேண்டும்.

சென்ற5 ஆண்டுகளாக கடந்த அரசாங்கத்தால் எவ்வித நல்ல சேவையும் ஆற்றப்படவில்லை. மகா வித்தியாலயங்கள் வித்தியாலயங்கள் என்ற பேரளவில் மகா வித்தியாலயங்கள் ஆக இருந்தனவேயன்றி அவை அடிப்படைமுன்னேற்றம் அடையவில்லை.

வித்தியாலயங்களுக்கு விஞ்ஞான கூடமோ, விளையாட்டு மைதானமோ, விசேட ஆசிரியர்களோ வழங்கப்படவில்லை.

தேசிய வித்தியாலய அதிபர்கள் சங்கத்தின் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

0 சமவேலைக்கு சமசம்பளம் என்ற அடிப்படையில் அதிபர்கள் வேதனம் புனரமைப்புப் பெறவேண்டும்.

0 கல்லூரிகளும் மகா வித்தியாலயங்களுக்குமிடையே உள்ள தரவித்தியாசங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

0 கல்லூரிகள் போன்று மகாவித்தியாலயங் களிலும் கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திர வகுப்புகள் உள்ள பாடசாலைகளுக்கும் பிரத்தியேக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

தேசிய வித்தியாலய அதிபர் சங்க நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு. செ. சிவப்பிரகாசம் (அதிபர் உசன் மகா வித்தியாலயம்), காரியதரிசி: திரு. ஐ. ஆ. இராமசாமி (அதிபர் இராமக்கிருஷ்ண வித்தியாலயம் கோண்டாவில், பொருளாளர்: திரு. எஸ். முருகேசு (அதிபர் அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாலயம்)

— —

## கண்ணீர்ப் புகை; குண்டாந்தடிப் பிரயோகம்.

கோட்டை, ஞாயிறு

மீடிறிகிறிய பொலிஸ் பகுதியிலுள்ள தியசேனபுரத்தில் 500க்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தின் மீது போலிசார் கண்ணீர்புகைப் பிரயோகம் செய்தனர்.

சட்டத்திற்குப் புறம்பாகவுள்ள ஒரு குடிசையை நாசமாக்கும் பொழுது பொலிசாரை இவர்கள் தாக்கினர் என பொலிஸ் தலைமை நிலையம் அறிவித்தது.

அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு ஏற்ப அவ்விடத்திற்குப் பொலிஸ் குழு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது அப்பொழுது மக்கள் பொலிசாருக்கு இடையூறுசெய்த பொழுதே பொலிசாரால் கண்ணீர்ப் புகையும் குண்டாந்தடிப் பிரயோகமும் செய்ய வேண்டி ஏற்பட்டதென பொலிஸ் தலைமை நிலயச் செய்தியிலிருந்து தெரிய வருகிறது.

—

## புதிய கல்வி மாஅதிபர்கள்

கோட்டை, ஞாயிறு

நாட்டிலுள்ள பிரதேச கல்விக்காரியாலயங்கள் யாவற்றிலும் விரைவில் புதிய அதிபர்கள் கடமையாற்றுவார்கள் இக்காரியாலயங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளை இடமாற்றுவது எனக் கல்வித்திணைக்களகம் தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சின் அதிபராகக்கடமையாற்றிய திரு. டி. ஜி. சுகததாஸா கொழும்பு மாவட்ட கல்வி அதிபராகக் கடமையாற்றுவார். கொழும்பு மாவட்டகல்வியதிபராகவிருந்த திரு. வி. ஜி. பி. முனசிங்காகாலிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

மேலும் காலி, கம்பகா. கேகாலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், குருநாகல், மட்டக்களப்பு இரத்னபுரி, கண்டி ஆகிய இடங்களின் கல்விமா அதிபர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்

மட்டக்களப்பில் கல்விமா அதிபராக கடமையாற்றிய திரு. வி. சங்கரலிங்கம் யாழ். மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட கல்விமா அதிபரான திரு. எஸ். தணிகாசலம் கல்வியமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மற்றவர்களைத் திருத்த முயலுவதற்குப் பதில், அவர்களுக்குப் பணிசெய்து, நம்மை நாமே திருத்திக்கொள்ள முயலுவதே சிறந்தது. உண்மையுள்ளவர்களுக்கே திருவருள் கிடைக்கும்.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 8-ந் திகதி (22-6-70)


## இலங்கையும் இந்தியாவும்

இலங்கையும் இந்தியாவும் பரஸ்பரம் உதவிசெய்துகொள்வதென்று தீர்மானித்து அதற்கான ஏற்பாடு செய்துகொள்வதாயின் இருநாடுகளுக்கும் அதனுல் நன்மை கிடைக்கும். சிறப்பாக இலங்கையின் பல சங்கடங்கள் தீரக்கூடியதாக இருக்கும்.

நமக்கு சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டதும், இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் அவசரமாக ஒரு கோரிக்கை விடுத்தது உடனே எவ்வித நிபந்தனையுமின்றி பத்தாயிரம் டன் சீனியை இலங்கைக்கு அனுப்பிவைக்க இந்தியா முன்வந்தது. நமது அவசரத் தேவைகளுக்கு அண்டையிலுள்ள இந்தியாவே உதவக்கூடுமென்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

இச்செய்தியைப் படித்துவிட்டு இந்தியப் பத்திரிகை ஒன்றில் ஓர் இந்தியர் எழுதிய கடிதத்தில், 'இலங்கையின் சீனி முதலிய தேவைகளை இந்தியா கொடுக்கும் அதேசமயத்தில், இந்தியாவுக்கும் கொப்பரா, தேங்காய் எண்ணெய், கொட்டைப்பாக்கு முதலியவை அதிகம் தேவையுள்ளன. இந்தியாவில் தேங்காய் எண்ணெய் விலையோ மிக மிக அதிகம். ஆகவே பண்டமாற்றுமுறையில் இந்தியாவும் இலங்கையும் புதிய வர்த்தக ஏற்பாடு செய்துகொண்டால், இருதேச பொதுமக்களுக்கும் அது மிக நன்மையாக இருக்கும்'' என்று சரியாக அறிவுறுத்தியிருக்கின்றுர். இரு அரசாங்கங்களும் இதைப் பற்றி ஆலோசனைசெய்து, வீண்தாமதமின்றி அவ்வித ஒழுங்கை ஏன் செய்துகொள்ளப்படாது?

யாழ்ப்பாணப் புகையிலை என்றுல் மலையாளத்து மக்களுக்கு மிகவும் விருப்பம். சிலவருடங்களுக்கு

பத்தையும் தேவையையும் பொருட்படுத்தாமல், கண்மூடித்தனமாக, நமது புகையிலைக்குப் படிப்படியாக தடைபோட்டு, இப்போது அடியோடு இறக்குமதியை நிறுத்திவிட்டது. இந்த விஷயத்தைப் பற்றி மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும், யாழ்ப்பாண புகையிலைக்கு பதில், இந்தியா நமக்கு அவசியம் தேவையான ஏதாவது சரக்கை அனுப்பிவைக்கலாம். செலாவணிச் சங்கடங்கள் எதுவுமின்றி இப்படி ஒழுங்குசெய்துகொள்ள எவ்வளவோ இடமுண்டு.

புதிய நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா விடுத்த ஓர் அறிக்கையில், இலங்கையின் பணநிலை மிக மோசமாக இருப்பதாயும், ஆகவே மக்கள் வெளிநாடுகளுக்கு யாத்திரை செய்வதை ஒத்திவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவும் வெளிநாடுதான், ஆனுல் முப்பது மைல் தூரத்தில்தான் அது உள்ளதென்பதையும், அண்டையிலுள்ள ஒரே ஒரு நாடான இந்தியாவுக்குச் செல்லவேண்டுமென்ற ஆவல் இலங்கையில் சிங்களவர் உள்ளிட்டு பொதுமக்கள் அனைவருக்கும் உள்ளதென்பதையும் நிதி அமைச்சர் நினைத்துப்பார்த்தால் இந்தியா யாத்திரை விஷயமாக அதிக சலுகை காட்ட நியாயமுண்டு. செலாவணி விரயமாகுமே என்றும் யோசிக்கத் தேவையில்லை. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு யாத்திரையாயும் உல்லாசப்பிரயாணமாயும் வர பலர் ஆவலுடன் இருக்கலாம். ஆகவே இரு அரசாங்கங்களும் கூடி இவ்விஷயமாக பரஸ்பரம் ஓர் ஒப்பந்தம்செய்துகொண்டால் செலாவணியைப் பற்றிய பிரச்னை எழாமல் தடுக்க

# திருக்கேதீச்சர வித்தியாலயம் ஒரு மகாவித்தியாலயமாகட்டும்

[திருக்கேதீச்சர இந்து தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்ரேர்தின விழாவும்பரிசளிப்பு வைபவமும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது. மன்னர் பிரதமகல்வியதிகாரி திரு. வே. நடராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் மன்னர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன், அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன், பண்டிதமணி திரு. , கணபதிப்பிள்ளை உடபடப் பலர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர். இவ்விழாவையொட்டி இப்பாடசாலை தொடங்கப்பட்ட வரலாற்றை பண்டிதமணி சுவைபட கூறுகிருர் இக்கட்டுரையில்.]

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

திருவருளினுலே திருக்கேதீசுவர வித்தியாலயம் வளர்ச்சியுற்றுக் கனவான்களின் மதிப்பைப் பெற்றிருப்பதைக் காணும்போது "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்ற முறையில் தாய்மை உணர்ச்சி உண்டாகிறது தாய்மை உறவு கொள்ளுதற்கு எனக்கு உரிமையில்லையாயினும் பரமாணு அளவாவது உரிமை இலலாமலும் இல்லை.

இந்தப் பாடசாலையை முதன்முதலில் தொடக்கிவைத்தவர் திருநெல்வேலியிலுள்ள அநாத சாலை வளர்த்த இளைஞர் ஒருவர். அவர் பெயர் தா. சுப்பிரமணியம். 'தாவன்னு' என்று அவரை அழைப்பது வழக்கம்.

'தாவன்னு' குழந்தைப் பருவம் தொடக்கம் அநாத சாலையில் வளர்ந்து. சைவாசிரிய கலாசாலையில் பயின்று ஆசிரியரும் ஆனுர்.

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் உயிர் நாடியாய் விளங்கிய திரு. சு. இராசரத்தினம் அவர்கள் மன்னரிலே திருக்கேதீச்சரப்பகுதியிலே ஒரு பாடசாலை எப்படியும் தாபித்தேதீரவேண்டும் அப்பணியை நீ செய்' என்று பணித்து பிரமுகர்கள் சிலருக்கு அறிமுகக் கடிதமுங் கொடுத்து அந்த அநாத இளைஞரை இங்கே அனுப்பிவைத்தார் கனம் இராசரத்தினம் அவர்கள். அறிமுகம் செய்துவைத்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர் கத்தோலிக்க சமயத்தவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அநாத இளைஞர் திருக்கேதீஸ்வரம் நோககி வந்தார். திருக்கேதீஸ்வரம் காடாயிருந்த காலம் அந்தக்காலம். கடவுளும் பூசகர் ஒருவரும் கணக்கப்பிள்ளையும் மாத்திரமே திருக்கேதீஸ்வரத்தில் இருந்தார்கள். பேர்க்குவரவு வசதி உணவு வசதி இல்லாத காலம்.

அநாத இளைஞர் துணிந்து வந்து திருககேதீசுவரப் பெருமானை வேண்டிக் கொண்டு, சேற்றுக்குளம் என்ற இடத்தில், ஒரு குளக்கட்டுக்கு அருகில் ஒரு சிறு கொட்டில் பிரமுகர்களின் உதவியினுல் அமைத்துக் கொண்டு பாடசாலையை ஆரம்பித்துவைக்கும் பொருட்டு திரு இராசரத்தினம் அவர்களுக்கு எழுதினுர்

திரு இராசரத்தினம் அவர்கள் காரில் புறப்பட்டார்கள். அப்பொழுது மானேஜராயிருந்த அட்சரலிங்கம் அவர்களும் கூடப்புறப்பட்டார் நானும் அவர்களுடன் வந்தேன். வெகு கஷ்டப்பட்டு மன்னுர் வந்து சேர்ந்தோம். அப்பால் திருக்கேதீசுவர தரிசனமும் கிடைத்தது. உணவு கிடைக்கவில்லை. அவ்வளவில் அலுத்துத் திரும்ப எண்ணியபோது, அந்தத் 'தாவன்னு' என்ற அநாத இளைஞரின் கண்கள் கலங்கின. அந்த அநாத இளைஞரின் கண்ணீர் இடையிலே திரும்பாது இந்த வித்தியாலயத்துக்கு மூலமாயிருந்த அந்தக் கொட்டிலிலான பாடசாலைக்கு ஒருவாறு எங்களை வந்துசேரச் செய்தது. அங்கே இரண்டொரு சிறுவர்கள் இருந்தார்கள். 'தாவன்னு' இங்கும் அங்கும் ஓடி நான்கோ ஐந்தோ மனிதர்களைக் கொண்டுவந்து சேர்த்தார் நாங்களுட்படப்பத்துப்பேர் வரையில் அன்று கூடினேம் கூட்டத்தில் சொற்பொழிவுக்கு இடமில்லாமற் போய்விட்டது வானரர்கள் மாத்திரம் தங்கள் கலைநிகழ்ச்சிகளை மரந்தோறும் நடத்தினுர்கள் திரு இராசரத்தினம் அவர்கள் தனித்தனி ஒவ்வொருவரோடும் சம்பாஷணை செய்தார்கள் அவ்வளவில் ஆரம்பவிழா பூர்த்தியானது தாவன்னுவைத் தனிக்கவைத்துவிட்டு நாங்கள் திரும்பினேம் அந்த அநாத இளைஞரின் முயற்சியால் முளைகொண்டு வளர்ந்ததே இந்த வித்தியாலயம்

தாவன்னு மறைந்தபோது அவருக்கொரு சத்திரம் எழுதி வெளியிட்டதோடமையாது அவரது ஞாபக மலராக நாவலர் எழுதிய யாழ்ப்பாணச்சமய நிலையும் தனிப்புத்தகமாக வெளியிடப்பட்டது சைவ அநாதசாலை தாவன்னுபோல்வாரைச் சிருட்டி செய்தமை நினைகூரத்தக்கது

கிளிநொச்சியில் 65 அநாதைப்பிள்ளைகளை இரத்தினம் என வழங்கும் கதிரைவேலு என்கின்ற ஆசிரியர் அரசாங்க உதவியின்றியே உதவியாசிரியருதவியுடன் அதரித்து வருகின்றுர் அவரும் தாவன்னுவைப்போல சைவ அநாதசாலை வளர்த்தெடுத்த ஒரு இரத்தினம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லாமலிருக்க முடியவில்லை

இப்பொழுது தாவன்னு உட்பட திரு இராசரத்தினம் அவர்கள், திரு அட்சலிங்கம் ஆகிய மூவரும் ஆவியுலகைச் சேர்ந்துவிட்டார்கள் அவர்களின் ஆவியுலகஆசி இந்தப்பாடசாலைக்குஎன்றென்றும் இருந்துவரும்இன்றைய நிகழ்ச்சி அவர்களை உச்சிவரைகுளிரச் செய்யும்.

இப்பாடசாலையின் ஆரம்பவிழா என் மனத்திரையில் ஒருபுறத்தே காட்சியளிக்கின்றது. அதேசமயத்தில் கண்ணிண வான்கள் மிக்க இவ்விழா நிகழ்ச்சியால் மனம் பூரிக்கின்றது. இப்பாடசாலை மேன்மேலும் வளர்ந்து ஒரு மகாவித்தியாலயமாவதற்கு இறைவன் திருவருள் பெருகுவதாக என்று என் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# புதிய அரசியல் திட்டத்தில் மக்களின் பங்கு

'மோர்னிங் ஸ்டார்' ... நிலைமைகள் நிலவு | பிரச்னையாகும் ...

### ஆனைக்கு பயந்தவர் ஆனைமுகன் கோவிலில் ஒன்றுகினர்

விஸ்வமடு ஞாயிறு காட்டில் ஆனையைக் கண்டு அஞ்சிப் பிரிந்த இருவர் ஆனைமுகன் ஆலயத்தில் ஒன்று கூடியநிகழ்ச்சி அண்மையில் விஸ்வமடுவில் ஏற்பட்டது.

## "பொற்தொழிலாளருக்கு தங்கம் கிடைக்க வழி செய்வேன்"

-- துரைரத்தினம் எம். பி.

நெல்லியடி, ஞாயிறு "கடந்த சில ஆண்டுகளாகவே பொற்தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஒன்றரை அவுஸ்ஸ் தங்கம் போதாது என்று வாதாடி வந்துள்ளேன், தற்போதைய வாழ்க்கைச்செலவு இருக்கும் நிலையில் இந்த ஒன்றரை அவுன்ஸ் தங்கம் அறவே போதாது. இதனை நினைவிற்கொண்டு நிவர்த்தி செய்வதற்கு அமைச்சரிடம் எடுத்துரைப்பேன். கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் வழங்கப்படாத தங்கத்தை உடனே வழங்க ஆவன செய்வேன்.'

இவ்வாறு பருத்தித்துறை பொற்தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தமக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்தின் போது பருத்தித்துறை ஆட்சின்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் குறிப்பிட்டார்

இந்தக் கூட்டத்தில் பலர் திரு. துரைரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர். திரு. வ. தில்லை நடேசன் தொழிலாளர் சங்க ரீதியாகச் செயற்படுத்துவதுடன் கட்டுப்பாடாகவும் இருக்கவேண்டும் என்ருர்.

'தொழிலாளர்கள் நலம் பெற தொழிற் சங்கங்கள் அமைத்து இயங்க வேண்டும். அப்போதுதான் தொழிலாளர் பலம் அடைய முடியும. அவர்கள் தொழில் விருத்தி அடையும், செய்யும் தொழிலால் வாழ்க்கைத் தரம் உயரும், தொழில் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் தீரும்' என்று 'தொழிற்சங்கமும் தொழிலாளர் நலனும்' என்ற பொருளில் பேசிய திரு. ஆ. தேவராசன் கூறினுர். 'சோஷலிச சமுதாய அமைப்பில்தான் தொழிலாளர் நலம்பெற முடியும். அத்தகைய ஒரு திருப்பம் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. அந்த சோஷலிச மலர்ச்சி நிரந்தரமாக இடம் பெற தொழிலாளர் ஒத்துழைக்க வேண்டும்' என்று அவர் மேலும் கூறினுர்.

## சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்

### பிரதமர் கண்டிப்பாக இருப்பார்?

கோட்டை, ஞாயிறு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் நடத்தும் விஷயத்தில் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மிகவும் கண்டிப்பாக இருப்பார் என்று தெரிகின்றது

இலங்கை பிரஜாவுரிமை வழங்குவதற்கு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையை இலங்கை உறுதியாகப் பின்பற்றும் என்றும் இந்தியா திரும்ப வேண்டியவரின் விஷயத்தில் கண்டிப்பாக விருக்குமென வும்விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோத இலங்கை சம்பந்தமான விஷயம் என்றும் இந்திய பிரஜாவுரிமை பெறுகிறவர்கள் உண்மையாக தாயகம்திரும்புவதைப் பொறுத்தே நாடற்றவர்கள் இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே இலங்கையின் நிலையென்றும் மேற்படி வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன:

வெளிநாட்டவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான அம்சம் எதுவும் நமது அரசியல் சாஸனத்தில் இல்லாததின்காரணமாகவே புதிய சட்டம் ஏற்படுத்த வேண்டியிருந்தது என்றும் கூறப்படுகின்றது.

## 'விவசாயம் ஒன்றுதான் சுதந்திரமான தொழில்'

### விஸ்வமடு வரவேற்பில் வவனியா எம். பி.

— நமது நிருபர் கே. கணபதிப்பிள்ளை —

விஸ்வமடு, ஞாயிறு "படித்துவிட்டு உத்தியோகத்தை நம்பியிராமல் விவ

மிருக்கும். உத்தியோகத்திற்காகத்தாய்மொழியைமறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்தாமதமின்றி அவ்வித ஒழுங்கை ஏன் செய்து கொள்ளப்படாது?

யாழ்ப்பாணப் புகையிலை என்றால் மலையாளத்து மக்களுக்கு மிகவும் விருப்பம். சிலவருடங்களுக்கு முன்வரை அவர்கள் இதைப் பெறக்கூடியதாக இருந்தது. இங்கு யாழ்ப்பாணத்திலும் இதற்கென்றே புகையிலையைப் பலர் உற்பத்திசெய்து வந்தனர் ஆனால் இந்திய அரசாங்கம் மக்களின் விருப்ப வர பலர் ஆவலுடன் இருக்கலாம். ஆகவே இரு அரசாங்கங்களும் கூடி இவ் விஷயமாக பரஸ்பரம் ஓர் ஒப்பந்தம்செய்துகொண்டால் செலாவணியைப் பற்றிய பிரச்னை எழாமல் தடுக்க முடியும். யாத்திரிகர் எண்ணிக்கையும் வருமானமும் அதிகரிக்கும். இருநாடுகளுக்கும் நல்லுறவும் நல்லெண்ணமும் இதனால் பெருகி, வேறு பல பல நன்மைகளும் ஏற்படுவதாக இருக்கும்.

## சுருட்டுத் தொழில்

சுருட்டுத் தொழிலைக் 'கோர்ப்பரேஷன்' அதாவது கூட்டுத்தாபனமாக்க வேண்டுமென்று ஓர் அன்பர் தெரிவித்திருந்த யோசனை நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதியில் வெளிவந்திருந்தது. தேயிலை, ரப்பர் மற்றும் தெங்குப் பொருள் போன்று புகையிலை நாட்டின் வருமானத்தைத் தேடித்தரும் முக்கிய விளைபொருளாகக் கணிக்கப்படாவிடினும் ஒரு காலத்தில் அந்நிய செலாவணியைத் தேடித் தருவதற்கும் இங்கு பல குடும்பங்கள் வாழ்வதற்கும் வழிவகுத்திருந்தது. இத்தொழிலைக் கூட்டுத்தாபன மாக்கினால் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப் போருக்கும் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் நன்மை கிடைக்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

யாழ்ப்பாணப் புகையிலைக்கும் யாழ்ப்பாணச் சுருட்டுக்கும் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலும் நல்ல மதிப்பிருக்கிறது. சுருட்டுத் தொழிலுக்குப் போதிய ஆக்கமும் ஊக்கமும் கிடைக்காததாலும் இதற்கு முன்னிருந்த அரசாங்கங்கள் இதில் அதிக அக்கறை செலுத்தத் தவறியதாலும் இத்தொழில் விருத்தியடையாததுடன் அது க்ஷீணித்தும் வர நேர்ந்தது.

தரமான புகையிலையை இங்கு உற்பத்தி செய்யவும் அவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நல்ல ரக சுருட்டுக்களை இங்கு உற்பத்தி செய்து உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யவும் வாய்ப்பேற்படுவதுடன் சுருட்டுத் தொழிலையே நம்பிவாழும் பல குடும்பங்களுக்கும் நன்மையளிக்கக் கூடியது இந்தக் கூட்டுத்தாபனமாகும் யோசனை. மக்கள் அரசாங்கம் இதுபற்றிக் கவனம்செலுத்துமென்று எதிர்பார்க்கலாமா?

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## புராணபடனம் இன்று முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலில் மூன்றுமாத காலமாக மீசாலை பக்திநெறிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவந்த கந்தபுராண படிப்பு இன்றுடன் பூர்த்தியடைகின்றது. இன்றுவள்ளியம்மன் திருக்கல்யாணம் நடைபெறும். ஆலயமடத்தில் நாளை மகேஸ்வரபூசை நடைபெறும்.

## கொழும்பு அரசாங்க அதிபர்

கோட்டை, ஞாயிறு

உள்நாட்டு அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. டங்கன் டி அல்விஸ் கொழும்பு அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## யாழ்ப்பாண ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒரு இடம் இல்லையென்றும் பிரயாணிகள் தெரிவித்தனர்.

ஜன நடமாட்டம் உள்ள பிரதான இடத்தில் பஸ் நிலையம் இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும், மற்றொரு பிரயாணி தெரிவித்தார்.

பஸ் நிலையத்தில், டீசல் எண்ணைகள் ஊற்றப்படுவதால், பிரயாணிகளின் உடைகள் பழுதடைவதாகவும் ஒருபிரயாணி கூறினார்.

(கு. வி. ம)

# மக்களின் பங்கு

['மோர்னிங் ஸ்டார்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை சமீபத்தில் எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் இது.]

ஸ்ரீலங்கா நீண்டகாலப் பகுதிக்குப் பின்னர் அதாவது 22 வருடங்களுக்குப் பின்பு தற்போது அரசியல் திட்டத்தைத் தானே வகுக்கத் தீர்மானித்துள்ளது. புதிய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கம் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

இலங்கை மக்கள் ஜனநாயகமுறையில் தங்கள் வாக்குகளையளித்து அதன்மூலம் ஆட்சிமன்றத்துக்கு அது அரசியல் நிர்ணய சபையையாக செயலாற்றி புதியதொரு அரசியல் திட்டத்தை நிர்ணயித்து அதை ஏற்று அதன்படி நடக்கப் பூரண உரிமை அளித்துள்ளனர். இந்தப் புதிய அரசியல் அமைப்பு இலங்கையை சுதந்திரக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தும் நாட்டின் சகல பிரஜைகளதும் அடிப்படையுரிமைகள் சுதந்திரம் ஆகியவற்றின் பாதுகாப்பு உட்பட சோஷலிச ஜனநாயகத்தின் நோக்கங்களை இக்குடியரசு உணர்ந்து செயல்படும்.' நீண்டகாலமாக தற்போது நாம் கூறும் இலங்கையின் அரசியல் திட்டம் என்பதற்குப் பதிலாக இது எதிர்பார்த்த தொன்றாகும். தற்போதைய நமது அரசியல் திட்டம் நல்ல நோக்கோடு அரசியல் நிர்ணயசபை நிபுணர்களால் வகுக்கப்பட்டு ஆநேகமாக ஓரளவுக்கு வெற்றியளித்தது எனினும் அது அமைப்பிலும் தன்மையிலும் அந்நிய அரசியல் அமைப்புச் சாயலைப் பெற்றுள்ளது. இதுவே சுதந்திர நாடொன்றைத் தாக்கியிருக்கக் கூடாத பல பிரச்னைகளுக்கு மறைமுகமான காரணமாகும். முன்பொரு சமயம் காலஞ்சென்ற பாரதப்பிரமர் நேரு கூறியது போன்ற ஒரு சுதந்திர நாட்டுக்கு உருவாக்கப்படும் அரசியல் திட்டம் 'அறிவு மிகுந்த வழக்கறிஞர்களால் ஒன்று கூடி உருவாக்கக்கூடாது, நலன்களைக் குறிக்கோளாகக் கொள்ள முயலும் சிறிய குழுக்களால் உருவாக்க கூடாது. வெளிநாட்டு அதிகாரியின் அல்லது அதிகாரத்தின் உதவியுடன் ஒரு பொழுதுமே உருவாக்கக் கூடாது. அரசியல் திட்டத்திற்கான அரசியல், உளப் பூர்வ நிலைமைகள் நிலவுவதோடு மக்களும் அதை வற்புறுத்தி அது அமைவதற்கான உடன்பாடுகளைத் தெரிவித்தால்தான் அத்திட்டத்தைக் கொண்டுவரலாம். தற்போது இத்தகையதொரு சூழ்நிலையும் காலமும் ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்போதைய ஆட்சிமன்றம் அரசியல் நிர்ணயசபையாக இயங்கும் அதில் யாவரும் நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனெனில் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதற்கு தெரிவுசெய்யப்படும் அதாவது அரசியல் நிர்ணயசபையாக விளங்கும் ஆட்சிமன்றத்தின்மூலம் நாட்டின் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்க மக்களின் பூரண உரிமை வேண்டுமெனத் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது. அதிகப்படியான பெரும்பான்மை அரசாங்க அங்கத்தவர்களையும் குறைந்த எண்ணிக்கை கொண்ட எதிர்க் கட்சி அங்கத்தவர்களையும் கொண்ட ஆட்சிமன்றத்தால் கட்சி நோக்கங்களுக்கு முதலிடம் கொடாது தேசிய நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாட்டுக்கு ஒரு அரசியல் திட்டத்தைவகுக்க இயலுமா? என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். இதற்கு வேறுவழி என்ன? இந்தியாவில் நிலைமைவேறு. ஏனெனில் அங்கு நாடு சுதந்திரமடைந்த பின்னர் கூடிய அங்கத்தவர் சபை அரசியல் நிர்ணய சபையேயாகும். ஆனால் இலங்கையின் நிலைமை இத்தகையதல்ல. இலங்கையில் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சிமன்ற முறையை அனுபவித்த பின்னர் புதியதொரு ஸ்திரமான ஆட்சிமன்றம் கையிலிருக்கையில் எப்படி வேறு ஒரு குழுவோ அல்லது சபையோ அரசியல் திட்டத்தை வகுக்கமுடியும் அரசியல் நிர்ணயசபை அமைக்கப்படாவிட்டால் அதை ஆட்சிமன்றத்தால் அல்லது தற்போது அதற்குப் பொறுப்பான ஆட்சிமன்றத்தின் ஆதரவோடு உருவாக்கவேண்டும். இவ்வாறு அமைத்தால் இது தற்போதைய ஆட்சிமன்றத்தின் மற்றுமொரு விஞ்ஞாபனமாகிவிடும். இதுமட்டுமன்றி நாடு ஒரு சுதந்திர குடியரசா இல்லையா என்ற மற்றொரு பிரச்னையும் எழக்கூடும். இந்திய அரசியல் நிர்ணயசபையின் பிரச்னைகளில் இது ஒரு முக்கிய பிரச்னையாகும் இதனால் தான் வின்ஸ்டன் சேர்ச்சில் இந்திய நிர்ணயசபையின் அமைப்புச் செல்லுபடியாகுமா எனச் சந்தேகப்பட்டார்.

இந்த அடிப்படையில் நோக்குமிடத்து தற்போதைய அரசாங்கத்துக்கு அரசியல் நிர்ணயசபையாக வியங்க அதிகாரமுண்டு. இந்தச் சபை தனது தெய்வீகத் தன்மைபொருந்திய அதிகாரத்தை அல்லது சேவையை நன்கு உணரவேண்டும். இந்திய தேசிய காங்கிரசைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு சபையே இந்தியாவின் நிர்ணயசபை என்பதில் சந்தேகமில்லை. எனினும் அது இந்தியப் பிரதிநிதியாகவே விளங்குகிறது. இதில்எதிர்ப்பு, புரட்சிக் கருத்துக்களை உடைய அங்கத்தவர்களும் உள்ளார்கள். ஆனால் இதில் ஒரு சிறப்பு என்னவெனில் இச்சபை அக் கருத்துக்களை வெளியிடுவதற்கும் தயங்குவதில்லை. இதுதான் இந்திய அரசியல் அமைப்பில் சிலரின் தேவைகளை விட பெரும்பான்மையின்விருப்பத்தை வெளியிடக் கூடியதாகவிடுக்கிறது. எனவே எமது ஆட்சிமன்றம் ஒரு கட்சிப் பலம்வாய்ந்ததாக விருப்பினும் தேசிய நலனுக்காக கட்சி உறுதிப்பாட்டைக் கூட இழக்கத் தயங்கக் கூடாது என நாம் நம்புகிறோம். மேலும் அரசியல் திட்டத்தை வகுக்குமிடத்து ஆட்சி மன்றத்தின் சாதாரண மசோதா போன்றுகருதிவிடக்கூடாது கனடாவில் அரசியல் திட்டம் உருவாக 2 வருடங்களும் 5 மாதங்களும் எடுத்தன. இந்தியாவுக்கு 3 வருடங்கள் அவுஸ்திரேலியாவுக்கு 9 வருடங்கள் எடுத்தன. எனவே இலங்கையும் மேற்குறிப்பிட்ட உலகநாடுகள் பொறுமையுடன் வகுத்ததுபோன்று பொறுமையாக வகுக்க வேண்டுமேயொழிய அவசரமாகச் செயல்படக்கூடாது. இந்திய அரசியல் அமைப்பு பூரண இந்திய அரசியல் அமைப்பாக அமைந்ததற்குக் காரணம் என்ன? அது உண்மையில் மக்களால் உருவாக்கப்பட்டதேயன்றி வேறு எவராலும் திணிக்கப்படவில்லை இந்தியாவை உருவாக்கும் அரசியல் அமைப்பு ஜனநாயகத்தை பேணுவது இந்தியாவில் ஒரு மசோதாவை எடுத்துக் கொண்டால் சிலவேளை 2473 திருத்தப் பிரேரணைகள் கூடக் கொண்டு வரப்படும் பொறுமையாக அவசரமின்றி எந்த விடயமும் விவாதிக்கப்படும் இத்தகைய ஒரு நடைமுறையையே எமது தற்போதைய அரசாங்கமும் கைக்கொள்ளும் என நாம் நம்புகிறோம் அதே வேளையில் ஆட்சி மன்றம் அதன் புதிய அரசியல் திட்டத்தையொட்டி வெளிவட்டாரங்களின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்குமென நம்புகிறோம் இத்திட்டத்திற்கான குழுக்களில்மக்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் இந்தியாவில் சிறுபான்மைத் தலைவரொருவரான திரு அம்பேத்கார் அரசியல் திட்ட தயாரிப்பு கமிட்டித் தலைவராக நியமிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது

## ஒன்ருகினர்

விஸ்வமடு ஞாயிறு

காட்டில் ஆனையைக் கண்டு அஞ்சிப் பிரிந்த இருவர் ஆனைமுகன் ஆலயத்தில் ஒன்று கூடியநிகழ்ச்சி அண்மையில் விஸ்வமடுவில் ஏற்பட்டது.

காட்டுக்கு வேட்டைக்குச்சென்ற குறிப்பிட்ட இருவரும் யானையொன்று திடீரென முன்னேவர அச்சத்தினால் திசை மாறியோடினர். சுமார் ஐந்து மணித்தியாலத்தின் பின்னர் இருவரும் விஸ்வமடு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வந்து ஒருவரைஒருவர் எதிர்பாராத வகையில் சந்தித்தனர் காட்டில்திசைதெரியாமல் அவர்கள் ஓடியமையால் அவர்களது உடலில்காட்டு மரங்கள் கீறியகாயங்களும் ஏற்பட்டுள்ளன.

## காட்டில் மரணம்

பூநகரி, ஞாயிறு

அரியாலையைச் சேர்ந்த பிரபல கொந்தராத்துக்காரரும் 10 பிள்ளைகளுக்குத் தந்தையுமான பொன்னையா என்பவர் பூநகரி வேரவில் பகுதிக் காட்டில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கொந்தராத்து வேலைகளை கவனிப்பதற்காக பூநகரி சென்று பார்வையிட்ட பின்பு வேரவில் என்னும் இடத்திலுள்ள காட்டில் இயற்கை உபாதைகளைக் கழிக்கச் சென்றுரென்றும் அவரை அதிக நேரமாகக் காணாது தேடிப்பார்த்த போது காட்டில் இறந்து கிடக்கக்காணப்பட்டார் எனவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனையின் பின் இயற்கை மரணமென மரணவிசாரணை அதிகாரியினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

## விஸ்வமடு வரவேற்பில் வவனியா எம். பி.

— நமது நிருபர் கே. கணபதிப்பிள்ளை —

விஸ்வமடு, ஞாயிறு

"படித்துவிட்டு உத்தியோகத்தை நம்பியிராமல் விவசாயமும் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் முன்னேற்றமடையமுடியும். படித்த வாலிபர் திட்டத்தின் மூலம் இப்படிக்காட்டில் வந்து, குடியேறி விவசாயத்தைப் பெருக்கி, நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயிகளாகிய உங்களுக்கு நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது. மனிதனுக்கு மனிதன் தலைவணங்காமல், சுதந்திரமாகச் செய்யும் ஒரே தொழில்விவசாயம்தானென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் இந்நாட்டு மக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் விவசாயிகளை மதிப்பதில்லை. அரசாங்க உத்தியோகப் பார்ப்பவர்களையே அவர்கள் மதித்து வருகிறார்கள். இப்படியான உத்தியோகப் பக்தி காட்டிவரும் மனப்பான்மை என்று மாறுமோ அன்றுதான் தமிழினத்திற்கும் சுபீட்சம் ஏற்படும்"

மேற்கண்டவாறு விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்ட வாலிபர்களால், தமக்களிக்கப்பட்ட வரவேற்பில்கலந்துகொண்டு உரையாற்றுகையில் வவனியா எம். பி, திரு எக்ஸ். செல்லத்தம்பு குறிப்பிட்டார்.

அலங்கரிக்கப்பட்ட உழவு யந்திர வாகனத்தில் விஸ்வமடு பிரதான வீதிவழியாக வவனியா எம். பி. திரு. செல்லத்தம்பு, உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி, கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை ஆகியோர் விஸ்வமடு ப.நோ.கூ. சங்கக் கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வரவேற்பு வைபவத்திற்கு திரு. க. யோகேஸ்வரன் தலைமைவகித்தார் தமிழரசுக் கீதத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது.

"நான்கு வருட காலமாகத் தொடர்ந்து இக்குடியேற்றத்திட்டத்தில் உழைத்துவரும் உங்களில் சிலர் மீது, பலாத்காரமாகக் காணிவெட்டிப் பயிர்செய்ததாக வழக்குத் தொடர்ந்துள்ளதாக அறிகின்றேன். இந்த வழக்கை வெகுவிரைவில் ரத்துச்செய்து, உங்கள் நல்வாழ்வுக்குப் பாடுபடுவேன்" என்று திரு. செல்லத்தம்பு உறுதியளித்தார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. ஜெயக்கொடி உரையாற்றுகையில், "காற்சட்டை உத்தியோகத்தை இனியும் நம்ப வேண்டாம் அது ஒரு அடிமையான, மிச்சமில்லாத தொழில், விவசாயிகளின் பெட்டியில் எந்நேரமும்பண மிருக்கும். உத்தியோகத்திற்காகத்தாய்மொழியைமறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது" என்று குறிப்பிட்டார்.

சாதி, மத, பேதமின்றி அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று கோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பாலசுந்தரம், திரு. எஸ், ராஜதுரை, இராமச்சந்திரன், ராஜரத்தினம், குணநிதி. ஸ்ரீநிதிக்காந்தா ஆகியோரும் உரையாற்றினர்.

## சகலஇன...

1-ம் பக்கத் தொடர்ச்சி

### நீதிமன்ற மொழி

நீதிமன்ற மொழிச்சட்டத்தை எங்கே அமுல் நடத்த முடியுமோ அங்கெல்லாம் அமுல் நடத்துவோம் அமுல் நடத்த முடியாத இடங்களில் செய்ய மாட்டோம்.

உத்தியோக மொழிச் சட்டத்தில் நியாயமான தமிழ் மொழிப் பிரயோக சட்டத்தை அமுல் நடத்துவோம். இதில தமிழ்மக்கள் பயப்படத் தேவையில்லை.

வெளிநாட்டு கொள்கை சர்வதேச சோஷலிச அடிப்படையிலேயே இருக்கும். முன்னைய அரசாங்கம் கம்போடிய, வியட்னும் போன்ற நாடுகளின் பிரச்னைகளில் மௌனம் சாதித்தது போன்று எமது அரசாங்கம் இருக்கமாட்டாது என்றும் திரு. இலங்கரத்தின கூறினார்.

எதிர்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில், புதிய வேலைத் திட்டத்துக்கு பூரண ஆதரவு தருவதாகச் சொன்னார். சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட திட்டங்களை உடனடியாக அமுல் நடத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று காலி எம். பி. டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா கூறினார்.

## கலாசார...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கலாச்சார அமைச்சருக்கு நாட்டின் மத கலாச்சார நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்கும். இச்சபையில் திரு. யோகராஜா என்ற தமிழர் ஒருவரும் ஜனுப் கமால்தீன் என்ற முஸ்லிம் ஒருவரும் அங்கத்துவம் வகிக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org